வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 08.11.2021 திங்கட்கிழமை | இதழ் : 338 | பக்கங்கள் : 16




## அதிகரிக்கிறது தொற்று;

# பயணத் தடை விதிக்கும் நிலைமை மீளவும் எழலாம்

## சுகாதார பணிப்பாளர் எச்சரிக்கை




கொழும்பு, நவம்பர் 08

"நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் உயர்வு ஏற்படுமாக இருந்தால் மீண்டும் பயணக் கட்டுப்பாட்டை அமுல்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும்."

- இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன எச்சரிக்கை விடுத்துள்ளார். 15

## நான்காவது அலை நாட்டை தாக்கும்!

### இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, நவ. 08

நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையில் சிறிதளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், இந்த வருட இறுதிக்குள் இலங்கை நான்காவது கோவிட் -19 அலையை எதிர்கொள்ளக்கூடும் - என்று உற்பத்தி வழங்கல் மற்றும் மருந்து பொருட்களை ஒழுங்குபடுத்தும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார். 15

## மேலும் 15 பேர் மரணம்

கொழும்பு. நவ. 08

நாட்டில் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி மேலும் 15 பேர் உயிரிழந்தனர்.

இவர்கள் நேற்று முன்தினம் உயிரிழந்தனரென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களில் 30 - 59 வயதுக்கு இடைப்பட்ட 03 பேரும், 60 வயதுக்கு மேற்பட்ட 12 பேரும் அடங்குவரென அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களுள் 15

## 626 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

கொழும்பு, நவ. 08

நாட்டில் மேலும் 626 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் 15

## வடக்கை நோக்கி நகரும் காற்றழுத்த தாழமுக்கம்!

### மீன்பிடித்தலை தவிர்க்குமாறு அறிவிப்பு

கொழும்பு, நவ. 08

வங்கக் கடலில் உருவாகி வரும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் வளர்ச்சியடைந்து வடக்கு மாகாண கடற்கரையை நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதனால், இன்று 15

## 'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணியை ஒழியுங்கள்!

### ஜனாதிபதியிடம் ஐ. தே. க. கோரிக்கை

கொழும்பு, நவ. 08

நாட்டின் ஒற்றுமைக்கு தீங்கு விளைவிக்கும் ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியை இல்லாது ஒழிக்க வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஐக்கிய தேசியக் கட்சி (ஐ. தே. க.) கேட்டுள்ளது.

வண. கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான செயலணி தேசிய ஒற்றுமையை சீர்குலைத்து வருகின்றது என்றும் அந்தக் கட்சி குற்றஞ்சாட்டியுள் 15

## சிவயோகன் காலமானார்!



வடமராட்சி, நவ. 08

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் எந்திரியுமான வேலுப்பிள்ளை சிவயோகன் நேற்று காலை காலமானார். 15

## அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு தொடர்ந்தும் நீடிக்கும்!

### இறக்குமதியாளர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 08

இறக்குமதி செய்யப்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களை துறைமுகத்தில் இருந்து விடுவிப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை துரிதகரமாக முன்னெடுக்காவிட்டால் சந்தையில் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்வதில் தற்போது காணப்படும் தட்டுப்பாடு தொடர்ந்து நீடிக்கும் 15

## இன்று முதல் டிசெம்பர் 10 வரை விசேட பாராளுமன்ற அமர்வுகள்!

கொழும்பு, நவ. 08

விசேட பாராளுமன்ற அமர்வுகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை ஞாயிறு மற்றும் அரச விடுமுறை தினங்கள் தவிர, ஏனைய அனைத்து நாட்களிலும் பாராளுமன்றம் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி நிதி அமைச்சர் 15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# சந்நிதி ஆலயத்தில் சுகாதார கண்காணிப்பில் புலனாய்வாளர்கள்

யாழ்ப்பாணம், நவ. 08

வரலாற்று பிரசித்தி பெற்ற வடமராட்சி - தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கந்தசஷ்டி உற்சவம் இடம்பெற்று வருகின்றது. இந்தநிலையில் சுகாதார நிலைமைகளை கண்காணிப்பதற்கு சிவில் உடை தரித்த புலனாய்வு பிரிவினரின் பிரசன்னம் அதிகமாகியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

மேலும், பக்தர்கள் அதிகாலை முதல் ஆலய தரிசனத்தில் ஈடுபடுகின்றனர். இதனால் கூட்ட நெரிசல் தவிர்க்கப்படுகின்றது. எனினும், மாலை வேளைகளில் அதிகளவான பக்தர்கள் கூடுகின்றனர். கொரோனா பெருந்தொற்று காலமான இந்தக் காலத்தில் ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்கள் சுகாதார நெருக்கடிகளை ஒழுங்குமுறையாக பின்பற்றும் பட்சத்தில் கந்தசஷ்டி விரத காலம் முழுவதும் தடையின்றி பூசைகளை நடத்த முடியும்.

எனவே, ஆலயத்துக்கு வருகை தரும் சுகாதார நடைமுறைகளை அவதானமாக பேணி கூட்டம் கூட்டமாக கூடுவதனை தவிர்த்து கந்தசஷ்டி ஆறு நாள் நிகழ்வும் இனிதாக நடைபெற பக்தர்கள் ஒத்துழைக்க வேண்டும் என ஆலய நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, நேற்றைய தினம் ஆலயத்தில் பின்பற்றப்படும் சுகாதார நிலைமைகளை அவதானித்தபடி ஆலய சூழலில் புலனாய்வுப் பிரிவினர் நின்றிருந்தனர் என்று அங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
13 - 11 - 1943



இறப்பு
03 - 11 - 2021

## திருமதி சண்முகநாதன் பாக்கியவதி

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் பாக்கியவதி அவர்கள் 03.11.2021 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சண்முகநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும், சந்திரலேகா (கனடா), சந்திரவதனி (கனடா), சந்திரகலா(பிரான்ஸ்), சர்வேஸ்வரன் (பிரான்ஸ்), சரவணபவன்(பிரான்ஸ்), சற்குணநாதன்(கனடா), காலஞ்சென்ற சபேசன், சந்திரமோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,காலஞ்சென்றவர்களான சிவபாதம், சகுந்தலாதேவி, சத்தியவதி மற்றும் சத்தியதேவி(கனடா), சோமசுந்தரம்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மகுலசிங்கம், சிவராஜலிங்கம், சிவசுந்தரம், இராஜதேவி, சர்மிளா, மைதிலி ஆகியோரின் அன்பு மாமியாரும்,ரஜீவா- ரமேஸ், மிலானி- அனுராஜ், தனுசியா- கஜன், ரமிளா- முரளி, இலக்கியா- அஜந்தன், சுதன், வர்ஷினி, சுபங்கன்- பருந்தா, சங்கரன், ஷாருஜா, மதுஷா, நிரோஷா, விதுஷா, ஷரணியா, ஐஸ்வர்யா, கோகுலன், வருண், அருண், கவின் ஆகியோரின் அன்புப் பேத்தியும்,ஹரினி, லக்ஷா, அகிலாஷ், அக்ஷயா, அஷ்வின், அஷ்விதா, அனுஷ்கா, அக்ஷரா, அக்ஷரன், ஆதிதேவ், இஷான், ஷாசனா, நிரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

பார்வைக்கு
Sunday, 07 Nov 2021 1:30 PM - 4:30 PM
Monday, 08 Nov 2021 3:00 PM - 3:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Monday, 08 Nov 2021 3:30 PM - 5:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Monday, 08 Nov 2021 5:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**சின்னக்கா (மகள்)**
+14164122091

தகவல்:
**குடும்பத்தினர்.**

# வடக்கில் நேற்று 28 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், நவ. 08

வடக்கில் 28 கொரோனா தொற்றாளர்கள் நேற்றைய தினம் புதிதாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் நேற்று 173 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே இந்தத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இதன்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி ஆதார மருத்துவமனையில் 09 பேருக்கும், மாவட்ட பொது மருத்துவமனையில் இருவருக்குமாக 11 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 3 பேர், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 3 பேர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 2 பேர், கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் ஒருவர், நொதேர்ன் சென்றல் தனியார் மருத்துவமனையில் ஒருவர், காங்கேசன்துறை கடற்படை முகாமில் இருவர் என யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 12 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி பிரதேச மருத்துவமனையில் ஒருவர், பூவரசங்குளம் பிரதேச மருத்துவமனையில் ஒருவர் என இரு தொற்றாளர்களும் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் ஒவரும், கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவரும், முழங்காவில் கடற்படை முகாமில் ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். (ஐ)

# இடித்த சுவர் வீழ்ந்து தொழிலாளி மரணம்!

வவுனியா, நவ. 08

ஈயத்தொழிற்சாலையில் இயந்திரப் பகுதிக்குள் ஈயத்தை உருக்குவதற்காக பயன்படுத்தப்படும் கல் சுவரை உடைத்துக் கொண்டிருந்த அது திடீரென இடிந்து வீழ்ந்ததில் தொழிலாளி ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியா ஓமந்தையில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மாத்தளை பகுதியை சேர்ந்த வேலு உதயராஜ் வயது 37 என்பவரே உயிரிழந்தார்.

இறந்தவரின் சடலம் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் பிரேத பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது.சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# 2 இலட்சம் பைசர் தடுப்பூசிகள் வந்தன!

கொழும்பு, நவ. 08

அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்ட மேலும் ஒரு தொகை பைசர் தடுப்பூசிகள் நேற்று நாட்டை வந்தடைந்தன.

இதன்படி 2 இலட்சத்து 2 ஆயிரம் பைசர் தடுப்பூசிகள் நாட்டை வந்தடைந்தன என்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (ஐ)

# வடமாகாண மரநடுகை மாதம் 08 கார்த்திகை 2021

**“கூர்மையாச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்”**
**-இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)**

கல்வி tv CHANNEL-1

## 08.11.2021 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல்<br>மறு ஒளிபரப்பு<br>அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

## 08.11.2021 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
08.11.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# புரட்சிகர மாற்றம்?

இந்த நாட்டில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவேன் - என்னை நம்புங்கள் என்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். அரசாங்கம் உள்ளுக்குள்ளும் வெளியிலும் தொடர்ச்சியான நெருக்கடிகளை சந்தித்துவரும் நிலையில்தான், அவர் இந்த அறிவிப்பை செய்திருக்கின்றார். நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. இறக்குமதி கட்டுப்பாடு தொடர்கின்றது. தொழில்சங்கங்கள் போராட்டங்களுக்கு தயாராகி வருகின்றன. பங்காளிக் கட்சிகள் பொதுவெளிகளில் அரசாங்கத்தை விமர்சித்து வருகின்றன.

பொதுஜன பெரமுனவின் விருப்பங்களுக்கு தம்மால் செயல்பட முடியாது என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்திருக்கின்றது. நாங்கள் மட்டுமல்ல பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அதிருப்தியில் இருக்கிறார் என்று விமல் வீரவன்ஸ கூறுகின்றார். பஸிலின் வரவை தொடர்ந்து பெரிய மாற்றங்கள் ஏற்படப்போகின்றன என்று கூறப்பட்ட ஆருடங்கள் அனைத்தும் பொய்த்துப் போய்விட்டன. தனிநபர்களின் ஆற்றலுக்கு ஈடுகொடுக்கக்கூடிய நிலையை தாண்டி நாடு அதிக தூரம் சென்றுவிட்டதாகவே தெரிகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் ஜனாதிபதி புரட்சிகர மாற்றமொன்றை ஏற்படுத்தப் போகிறாரென அறிவித்திருக்கின்றார். ஜனாதிபதியாக அவர் தெரிவு செய்யப்பட்ட காலத்தில் இருந்த நிலைமை, தற்போது இல்லை என்பதையே அவரின் கூற்று எடுத்துரைக்கின்றது. மக்கள் மத்தியில் அவர் மீதான நம்பிக்கை சரிந்து விட்டதால்தான் தன்னை நம்புங்கள் என்று கூற வேண்டியிருக்கிறது.

பொருளாதார ரீதியில் புரட்சிகர மாற்றமொன்றை அவரால் ஏற்படுத்த முடியாது. ஏனெனில், அந்தளவிற்கு சுயமாக பொருளாதாரத்தை கட்டியெழுப்பக்கூடிய வாய்ப்புகள் நாட்டில் இல்லை. நாடு அதிக கடனுக்குள் சிக்கிப் போயிருக்கின்றது. உலகின் இரண்டாம் நிலை சக்தியாக கருதப்படும் சீனா, இலங்கை மக்கள் வங்கியை கறுப்பு பட்டியலில் இட்டிருக்கின்றது. இது பற்றி தனக்கு தெரியாதென்று பஸில் ராஜபக்ஷ கூறினாரெனவும் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. அவர் இந்த நாட்டின் நிதியமைச்சர் என்று அறியப்படுகிறார். இந்த அடிப்படையில் சிந்தித்தால் ஜனாதிபதியால், பொருளாதார விடயத்தில் புரட்சிகர மாற்றம் எதனையும் ஏற்படுத்த முடியாது? அப்படியென்றால் அரசியல் ரீதியில்தான் அவர் கூறும் புரட்சிகர மாற்றம் ஏற்பட வேண்டும்.

புதிய அரசியல் யாப்பு தொடர்பான ஜனாதிபதியின் அறிவிப்பு அண்மையில் வெளியாகியிருந்தது. இராணுவ முகாமொன்றில் இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டமை தொடர்பில் சந்தேகங்களும் உண்டு. இதன் தொடர்ச்சியாக ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ - செயலணியின் தலைவராக ஞானசார தேரர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இதுபற்றி நீதியமைச்சுக்கு எதுவும் தெரியாது. அதிருப்தியடைந்த நீதியமைச்சர் தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியிடம் ஒப்படைத்திருக்கிறார். ஞானசார தேரர் எப்படியானவர் என்பதை அனைவரும் அறிவர். இவை அனைத்தினதும் விளைவாக - எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்கள் அச்சமடைந்திருக்கின்றனர்.

ஒரு பௌத்த குடியரசு தொடர்பிலும் அரசல் புரசலாக கதைகள் வருகின்றன. சம்பந்தன் இதனை இந்திய தூதுவரின் காதுகளுக்குள்ளும் போட்டிருக்கிறார். அரசியல் ரீதியில் ஒரு புரட்சிகரமான மாற்றம் ஏற்பட வேண்டுமாயின் - தேசிய இனப் பிரச்னை நிரந்தரமாக தீர்க்கும் வகையிலான சமஷ்டி அடிப்படையில் ஓர் அரசியல் சாசனத்தை கொண்டு வரவேண்டும். அதுதான் இதுவரை எந்தவொரு சிங்கள தலைவரும் செய்யாத புரட்சி. ஆனால், அப்படியொரு புரட்சியை ஜனாதிபதியால் நினைத்தும் பார்க்க முடியாது. அப்படியாயின் அடுத்தது?

சிங்கள பெரும்பான்மைக்கான புரட்சியாகத்தான் இருக்க முடியும். மேலும் பௌத்த அரசியல் மயப்படுத்தும் வகையில் ஏதேனும் புரட்சி இடம்பெறலாமோ! நீண்டகாலமாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என்னும் - ஒரு தீராத அவா தென்னிலங்கை சிங்கள பெரும் தேசியவாத சக்திகள் மத்தியில் உண்டு. அதனை இல்லாமல் செய்தாலும் அதுவும் ஒரு சிங்கள புரட்சிதான். ஜனாதிபதியின் பெயர் வரலாற்றில் தனித்துவமாக இடம்பெறும். ஒருவேளை அவர் கூறும் புரட்சி எதுவாகவும் இருக்கலாம்? இதை தமிழர் தலைவர்கள் என்போரால் விளங்கிக் கொள்ள முடியுமானால் - அது தமிழ் மக்களுக்கு நல்லது!

# ‘இறைவன்தான் இலங்கையை காப்பாற்ற வேண்டும்’!

- அலசுவது இராஜதந்திரி -



இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை அறிமுகம் செய்த முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தன ஒரு தடவை தமது அதிகாரங்கள் பற்றி கருத்து வெளியிட்டபோது “என்னால் ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்ற முடியாதே தவிர வேறெதனையும் என்னால் வேண்டுமானால் செய்ய முடியும்” என்று கூறியிருந்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையின் அறிமுகம் பற்றி லண்டன் பி. பி. சி. செய்தியாளர் ஒருவருக்கு அன்று ஜே. ஆர். ஜெயவர்த்தன பேட்டியளித்தபோது ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் பி. பி. சி. செய்தியாளர், “நீங்கள் ஒரு பலம் மிக்க ஆட்சியை அறிமுகப் படுத்தியுள்ளீர்கள். உங்களுக்கு பின்னர் வருபவர்கள் அதனை அதிகார துஷ்பிரயோகம் செய்யாது பாதுகாப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?” என்று மற்றுமொரு கேள்வியை எழுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த ஜே. ஆர். ஜெயவர்த்தன “இறைவன்தான் இலங்கையை காப்பாற்ற வேண்டும்” என்று பதிலளித்திருந்தார். எனவே, தற்போது நிலவுகின்ற ஆட்சி அதிகார விடயங்களை நோக்கும்போது ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியது நிதர்சனமாகியிருப்பது போன்றே காணப்படுகின்றது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்தபோது இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராணுவத்தில் ஓர் இளம் அதிகாரியாக இருந்திருப்பார். இதன்பின்னர் தொண்ணூறுகளின் நடுப்பகுதியிலேயே வடக்கு - கிழக்கு யுத்தம் முறுக்கேறியபோது இராணுவத்திலிருந்தும் விலகி அமெரிக்காவுக்கு கோட்டாபய ராஜபக்ஷ குடிபெயர்ந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இரு தினங்களுக்கு முன்னர் தென்னிலங்கையில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்ட கருத்து அவர் இராணுவ ரீதியான சிந்தனையிலிருந்து விடுபடவில்லை என்பதையே சுட்டிக்காட்டியிருந்தது.

‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்ற செயலணியின் உருவாக்கம் பற்றியும் அதற்கு தலைமை தாங்க சர்ச்சைக்குரிய பிக்குவான ஞானசார தேரரை நியமித்தது பற்றி குறிப்பிட்டபோதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ “இராணுவ நிர்வாகத்தையும் என்னால் முன்னெடுக்க முடியும். ஆனால், நான் அதனை செய்யப்போவதில்லை” எனக்கூறியிருந்தார்.

கூடவே, சர்சைக்குரிய சேதனப் பசளை பாவனை பற்றி குறிப்பிட்டபோது, “விவசாயியின் கழுத்தை பிடித்து சேதனப் பசளையை பயன்படுத்து என்று என்னால் கூறமுடியும். ஆனால், நான் அவ்வாறு செய்யப்போவதில்லை” எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இதுதவிர, மற்றுமொரு வேடிக்கையான விடயத்தையும் ஜனாதிபதி ஓரிரு வாரங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தார். “அரிசி விற்கவும், பருப்பு விற்கவும் நான் ஜனாதிபதி பதவிக்கு வரவில்லை” என்று அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றங்கள் தொடர்பாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராணுவப் பின்னணியைக் கொண்ட ஆட்சியாளர் என்பது அனைவரும் அறிந்ததே. இராணுவ ஆட்சியைக்கூட தம்மால் மேற்கொள்ள முடியும் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அத்தகைய ஆட்சியைக்கூட அவரால் சரிவர மேற்கொள்ளமுடியுமா? என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.


ஏனெனில், இராணுவத்தில் ஓர் இளம் அதிகாரியாக இருக்கும் போதே யுத்தத்தின் கெடுபிடியைத் தாக்குப்பிடிக்க முடியாது நாட்டை விட்டு கோட்டாபய ராஜபக்ஷ வெளியேறியிருந்தார். எனவே, அத்தகையவரால் எவ்வளவு தூரம் ஓர் இராணுவ ஆட்சியை முன்னெடுக்க முடியும் என்பது முக்கிய கேள்வியாகவும் இருக்கின்றது.

மற்றும் தாம் அரிசி விற்கவும் பருப்பு விற்கவும் ஜனாதிபதி பதவிக்கு வரவில்லை என்று கூட கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். இலங்கை ஒரு விவசாய நாடு. கைத்தொழில் நாடல்ல. அரிசியும், பருப்புமே இந்த நாட்டில் சாதாரண மக்களது பிரதான உணவு வகைகளாக இருக்கின்றன.

அரிசி, பருப்பு விற்க தாம் பதவிக்கு வரவில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளதை பார்க்கும்போது தாம் ஏதோ ஒரு கைத்தொழில் வளர்ச்சி கண்ட நாட்டின் தலைவராக இருப்பது போன்ற எண்ணத்தில் அவ்வாறு கூறியுள்ளாரோ என்றே எண்ணத் தோன்றுகின்றது.

ஜனாதிபதியின் இந்தக் கூற்றுக்களை உற்று நோக்கும்போது ‘நுதலும் தன்வாயால் கெடும்’ என்ற தமிழ் கூற்றே ஞாபகத்துக்கு வருகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

பணியிடத்தில் எதையும் நிதானமாக செய்தால் வெற்றி நிச்சயம். வீட்டிலும் வெளியிலும் வாக்கு வாதம் செய்ய வேண்டாம். எதிர்காலம் தொடர்பாக அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**இடபம்**

ஆர்வமுடன் செய்த முயற்சி ஒன்று சந்தோஷப் பலன் தரும். அக்கம்பக்கத்தினருடன் இருந்த வருத்தம் உங்கள் முயற்சியால் நீங்கும். சிக்கலான பிரச்னை ஒன்றில் சுமுகமான முடிவை எட்டுவீர்கள்.

**மிதுனம்**

பணியிடம் பற்றி மனதில் நிலவி வந்த கவலை தீரும். சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். பண வரவு நிம்மதி தரும். மற்றவர்கள் பிரச்னைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.

**கடகம்**

பணியிடத்தில் உங்கள் நிலை நிம்மதியளிக்கும் விதமாய் இருக்கும். மனதடுமாற்றம் ஏற்படுத்திக் கொண்டிருந்த கவலை ஒன்று தீரும். தவறான வழியில் சென்று நிம்மதியை இழக்க வேண்டாம்.

**சிம்மம்**

தொழில், வியாபாரம் நிதானமாக நடந்தாலும் லாபம் வரும். வேறு வேலைக்கு முயற்சி செய்பவர்கள் வெற்றி பெறுவீர்கள். நன்மைகள் மெல்ல நடக்கும். பரிசுப்பொருள் கிடைக்கும்.

**கன்னி**

சுபநிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் நிம்மதியைத் தரும். வாகனங்களில் செல்லும் போது அதீத வேகம் வேண்டாம். மனதடுமாற்றம் இல்லாமல் நிதானமாக செயல்படுவது நன்மைதரும்.

**துலாம்**

பணவரவு எதிர்பார்த்த அளவு இல்லாவிட்டாலும் தேவை நிறையும். நேற்றிருந்த கவலை ஒன்று இன்று மாறி நிம்மதி பிறக்கும். யார் பற்றியும் யாரிடமும் தவறாக பேசி அவதிக்குள்ளாக வேண்டாம்.

**விருட்சிகம்**

பிரச்னை ஒன்று முடிவுக்கு வருவதால் நிம்மதி மீளும். சகபணியாளர்கள் இடையே பழகும்போது கவனமாக இருப்பது நல்லது. பணியிடத்தில் கோபத்தை தவிர்ப்பீர்கள். பரபரப்பான நாள்.

**தனுசு**

பெரிய முதலீட்டை சற்றே தள்ளிப் போடுவது சிறந்தது. பணியிடத்தில் எல்லோரையும் அனுசரித்து செல்வது நன்மை தரும். குடும்பத்தினர்களுடன் இணைந்து திட்டமிட்டு பலன் அடைவீர்கள்.

**மகரம்**

உடனடி முடிவு எடுக்க முடியாமல் தடுமாற்றம் உண்டாகலாம். காத்திருந்த நல்ல செய்தி ஒன்று மாலைக்குள் வரும். குழந்தைப்பேறு, திருமணம் போன்ற நல்ல செய்திகள் உண்டு.

**கும்பம்**

எந்தப் பெரிய முடிவையும் தீர ஆலோசித்து எடுக்க வேண்டும். வேலைப்பளு அதிகமாகும். பயணம் பற்றி முடிவாகும். நண்பர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு உடனுக்குடன் தீரும்.

**மீனம்**

குழந்தைகளிடம் அன்பாக பழகுவது நன்மை தரும். உறவினரால் ஏற்பட்ட வருத்தம் ஒன்று அவராலேயே தீரும். மற்றவர் பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். பெற்றோர் மீது பாசம் அதிகரிக்கும்.

# அ.தி.மு.கவை வென்றெடுப்பதற்காகவே அ.ம.மு. கழகம் தொடங்கப்பட்டது

## பரபரப்பை ஏற்படுத்தியுள்ள டி. டி. வி. தினகரன் பேச்சு

*சென்னை, நவ. 08*

“அ.தி.மு.கவை வென்றெடுப்பதற்காகவே அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டது” என்று அக்கட்சியின் பொதுச் செயலாளரான டி. டி. வி. தினகரன் குறிப்பிட்டிருப்பது தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

நீண்ட இடைவேளைக்கு பிறகு அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாவட்டச் செயலாளர்கள், தலைமை கழக நிர்வாகிகள் கூட்டத்தை நேற்று முன்தினம் கூட்டியுள்ளார் அக்கட்சியின் பொதுச் செயலாளரான டி. டி. வி. தினகரன். இது மூன்று நாட்களுக்கு தொடர்ந்து நடைபெறுகின்றது.

இந்த கூட்டத்தை ஒட்டி செய்தியாளர்களிடம் பேசிய டி. டி. வி. தினகரன் அ. தி. மு.கவை வென்றெடுப்பதற்காக அ.ம. மு.க. தொடங்கப்



பட்டது என்று குறிப்பிட்டு பரபரப்பை ஏற்படுத்தினார்.

அதேநேரம் நிர்வாகிகள் கூட்டத்தில் அவர் இந்த இணைப்பு பற்றியெல்லாம் ஒன்றும் பேசவில்லை. மாறாக முழுக்க முழுக்க அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தை பற்றியே அவர் பேசியிருக்கிறார்.

“கொரோனா தொற்று காரணமாக உங்களையும் மக்களையும் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று தான் நான் நமது நேரடி சந்திப்பை தவிர்த்து வந்தேன்.

இப்போது நிலைமை கொஞ்சம் சீரடைந்து வருவதால் உங்களைச் சந்திக்க நினைத்தேன். என்னிடம் எதையோ எதிர்பார்த்து வந்தவர்கள் அது கிடைத்தவுடனோ கிடைக்கவில்லை என்று தெரிந்த உடனே இங்கிருந்து புறப்பட்டு விட்டார்கள். இப்போது என்னுடன் ,இருக்கும் நீங்கள் தெளிவாக இருக்கிறீர்கள். நீங்கள் தான் என்னுடைய பலம்.

அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் தொண்டர்களால் உருவாக்கப்பட்டது. இந்த, இயக்கம் கடந்த சில தேர்தல்களில் வெற்றி வாய்ப்பு இழந்திருக்கலாம் . ஆனால், நாம் யார் என்பதை நிரூபிப்போம். தேர்தலில் வெற்றி தோல்வி என்பது கடந்து வரக் கூடியது தான்” என்று கூறியிருக்கிறார் டி. டி. வி. தினகரன்.

# இரண்டு நாட்களாக தொடரும் கன மழை வெள்ளத்தில் மிதக்கும் சென்னை மாநகர்

*சென்னை, நவ. 08*

சென்னையில் நேற்று முன்தினம் இரவு முதல் பெய்து வரும் கனமழையால் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளக்காடாக காட்சி அளிக்கின்றன.

2015இல் சென்னையில் கடும் மழையால் பாரிய பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் 6 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அதுபோன்று மழை பெய்திருக்கிறது. சென்னை நுங்கம் பாக்கத்தில் நேற்று காலை 8.30 மணிவரை 21.53 செ.மீ. மழைப் பதிவாகியுள்ளது. விமான நிலையத்தில் 11.36 செ.மீ. மழைப் பதிவாகியுள்ளது. 2015க்குப் பிறகு சென்னையில் முதல் முறையாக 20 செ.மீக்கு மேல் மழைப் பதிவாகியுள்ளது என வானிலை ஆய்வு மைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் எதிரொலியாகச் சென்னையே வெள்ளக்காடாகக் காட்சி அளிக்கிறது. கொரட்டூர், பெரம்பூர், போரூர், பூந்தமல்லி, கோடம் பாக்கம், அண்ணா சாலை, தி.நகர், கிண்டி, அடையாறு, பெருங்குடி, ஓ.எம்.ஆர். உள்ளிட்ட சாலை களில் ஆறுபோல் வெள்ளம் ஓடுகிறது.

வேளச்சேரி உட்பட பெரும்பாலான பகுதிகளில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. ஆதம்பாக்கத்தில் உள்ள பாலாஜி நகர், குன்றக்குடி நகர், இன்கம்டாக்ஸ் காலனி ஆகிய குடியிருப்புகளில் மழைநீர் தேங்கி நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்துள்ளது. வேளச்சேரி பகுதியில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால், அங்கு குடியிருப்பவர்கள் தங்களுடைய வாகனங்களை வேளச்சேரி மேம்பாலத்தின் மீது அணிவகுத்து நிறுத்தி வைத்துள்ளனர்.

இதுபோன்று பல்வேறு பகுதிகளிலும் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் சென்னை மக்கள் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். வீடுகளுக்கு மழை நீர் புகுந்துள்ளதால் அவர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

# திராவிட கட்சியினர் தீபாவளிக்கு ஏன் வாழ்த்து சொல்வது இல்லை?

## சர்ச்சைகளுக்கு பதிலளித்து வைகோ விளக்கம்

*சென்னை, நவ. 08*

இந்துக்களின் புனித பண்டிகையான தீபாவளிக்கு திராவிட இயக்கத்தை சேர்ந்த தலைவர்கள் வாழ்த்து தெரிவிக்கவில்லை. இதற்கு பா.ஜ.க. உள்பட சில அரசியல் கட்சிகள், இந்து அமைப்புகள் கடுமையான கண்டனத்தை தெரிவித்தன. மேலும், தீபாவளிக்கு வாழ்த்து சொல்லாத இந்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் திராவிட கட்சியினர் தீபாவளிக்கு ஏன் வாழ்த்து சொல்வது இல்லை என்பதற்கு பதிலளித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ விளக்கம் கொடுத்துள்ளார்.

தீபாவளி பண்டிகைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், வைகோ உள்பட திராவிட இயக்கத்தை சேர்ந்தவர்கள் யாருமே வாழ்த்து தெரிவிக்கவில்லை. ரமழான், கிறிஸ்துமஸ் உள்ளிட்ட பண்டிகைகளுக்கு வாழ்த்து சொல்கிறீர்களே? என்று கேட்டதற்கு வைகோ கூறியதாவது:-

புராண பொய், மூட நம்பிக்கைகளை எதிர்த்து திராவிட இயக்கம் போராடி வந்திருக்கிறது. தீபாவளி பண்டிகை என்பது அப்படியொரு புராண பொய்யின் அடிப்படையில் கொண்டாடப் படும் பண்டிகையாகும். அதனால் நாங்கள் தீபாவளியை கொண்டாடுவது இல்லை. தீபாவளி என்பது வட நாட்டினருக்கே உரித்தான, அவர்கள் கொண்டாடும் பண்டிகை. அது தமிழர்களுக்கான பண்டிகை அல்ல. பண்டைய தமிழர்கள் தீபாவளி பண்டிகையை கொண்டாடியதற்கான எந்த வரலாற்று சான்றுகளும் இல்லை.

இஸ்லாத்தை பொறுத்த மட்டில் நபிகள் நாயகம் வாழ்ந்து காட்டினார். கிறிஸ்தவத்தை பொறுத்தமட்டில் ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டார். இவை அனைத்தும் உண்மை சம்பவங்கள். அதனால் கிறிஸ்துமஸ் உள்ளிட்ட கிறிஸ்தவர்களின் பண்டிகைகளுக்கும், இஸ்லாமியர்களின் பண்டிகைகளுக்கும் நாங்கள் வாழ்த்து சொல்கிறோம்.

பொங்கல் பண்டிகை என்பது உழவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கொண்டாடப்படும் பண்டிகை. மேலும் அது உழவர் மற்றும் தமிழர்களின் திருநாள் ஆகும். ஏனெனில், அது தமிழருக்கே உரித்தான பண்டிகை. பண்டைய தமிழர்கள் காலத்தில் இருந்து நீண்ட நெடுங்காலமாக இன்று வரை கொண்டாடி வரும் பண்டிகையாகும். அதனால் தமிழர் பண்டிகையாக பொங்கல் பண்டிகையை கொண்டாடுகிறோம். அத னால்தான் பொங்கல் பண்டிகைக்கு நாங்கள் வாழ்த்து கூறுகிறோம்” என வைகோ கூறினார்.



# வெள்ளத்தில் மூழ்கியது விடத்தல்தீவு கிராமம்!

## கடல்நீரும் உட்புகுந்தது

மன்னார், நவ. 08

மன்னாரில் நேற்று அதிகாலை வரை தொடர்ச்சியாக பெய்த கனமழையால் விடத்தல்தீவின் 3 கிராம சேவகர் பிரிவுகள் வெள்ளத்தில் மூழ்கின. கடல்நீரும் கிராமத்துக்குள் புகுந்துள்ளதாக தெரிய வருகின்றது.

இதனால், அந்தப் பகுதிகளின் மக்கள் பலர் இடம்பெயர்ந்து உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். இந்த வெள்ளத்தால், மீனவர்கள் சிலரின் படகுகளும் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று காலை சென்று பார்வையிட்டார். அத்துடன், பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்தார்.

மேலும், உரிய அதிகாரிகளுடன் இது தொடர்பில் கலந்துரையாடிய அவர், பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தினார் என்று கூறப்பட்டது. (ஐ)

# மடு பிரதேசத்தில் மருத்துவ முகாம்!

மன்னார், நவ. 08

மன்னார் மடு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சின்ன வலயன்கட்டு பகுதி மக்களின் சுகாதார நிலைமையை கருத்தில் கொண்டு மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அனுசரனையில் சின்ன வலயன்கட்டு பொது நோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை முதல் மாலை வரை மருத்துவ முகாம் ஒழுங்கமைக்கப்பட்டு இடம்பெற்றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் குழுத்தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் இடம்பெற்ற குறித்த மருத்துவ முகாமில் இரணை இலுப்பகுளம், பரசங்குளம், சின்ன வலயன்கட்டு பகுதிகளை சேர்ந்த மக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மருத்துவமனைக்கு செல்ல முடியாத நிலையில் இருந்த இந்தப் பகுதி மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. விநோதனின் ஆலோசனைக்கு அமைவாக மேற்படி மருத்துவ முகாம் ஒழுங்கமைக்கப்பட்டு இடம்பெற்றது.

இந்த முகாமில் பிராந்திய சுகாதார பணிமனையின் திட்டமிடல் அதிகாரி மருத்துவர் ஒஸ்மன் டெனி மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுகாதார பணி உதவியாளர்கள் கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனைகள் மற்றும் மருந்துவ உதவிகளை வழங்கினர். (ஐ)

# பழைய முறிகண்டியில் தினமும் மணல் அகழ்வு

முல்லைத்தீவு, நவ. 08

முல்லைத்தீவின் பழைய முறிகண்டி கிராமத்தில் நாள்தோறும் மணல் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாக துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் கந்தசாமி சகுந்தலாதேவி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர், துணுக்காய் பிரதேச செயலாளர் உட்பட பல்வேறு தரப்புகளுக்கு தகவல்கள் தெரிவிக்கப்பட்டபோதிலும் உரிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லை என்றும் அவர் கூறினார்.

ஆற்றுப்படுகைகளில் தொடர்கின்ற மணல் அகழ்வு பழையமுறிகண்டி குளத்தின் அணைக்கட்டுக்கு அருகாமையில் நிகழ்வதனால் குளத்தின் அணைக்கட்டு உடைப்பெடுக்கும் அபாயம் நிலவுகிறது என மக்கள் தன்னிடம் தெரிவித்தனர் என்றும் அவர் சொன்னார்.

“நாள்தோறும் கிராமத்தில் இருந்து இரண்டு டிப்பர்களில் மணல் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. டிப்பர்கள் பயணிப்பதனால் கிராமத்தின் முதன்மை வீதி சேதமடைந்து காணப்படுகின்றது. இதனைவிட மணல் அகழ்வால் பெருமளவு மரங்கள் இக்கிராமத்தில் அழிக்கப்பட்டு வருகின்றது” எனவும், பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (ஐ)

# அரசியல் பலம், படைகள் ஆதிக்கம் மூலம் சிங்கள - பௌத்த நாடாக்க அரசு முயற்சி!

## சிறீதரன் எம். பி. குற்றச்சாட்டு

கிளிநொச்சி, நவ. 08

**அரசாங்கம் அதன் அரசியல் பலத்தையும் படைகளின் ஆதிக்கத்தையும் ஒன்றுதிரட்டி, இது சிங்கள- பௌத்த நாடு என்று நிறுவுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது. அதன்பிரகாரம் தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்களில் பௌத்த சிதைவுகள் இருக்கின்றன என்று கூறி முன்னெடுக்கப்பட்டுவரும் அகழ்வாராய்வுகளும் இலங்கையை தனிச் சிங்கள - பௌத்த நாடாகப் பிரகடனப்படுத்தும் முன்நகர்வேயாகும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

வெடுக்குநாறி மலையில் அண்மைக்காலமாகவே இந்துக்கோவில் என்ற ரீதியில் பூசைகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால், முன்னர் அங்கு பௌத்த விகாரைகளின் சிதைவுகளே காணப்பட்டன என்று தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுர மானதுங்க கூறியிருந்தார்.

இதேவேளை காரைநகர் பகுதியில் பௌத்த தொல்பொருள் சிதைவுகள் காணப்படுகின்றன எனக் கூறி தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் அங்கு சென்றிருந்தனர். இதற்கு அந்தப் பகுதி மக்கள் கடும் எதிர்ப்பை வெளிக்காட்டியிருந்தனர். இவை தொடர்பில் கருத்துரைத்த போதே சி. சிறீதரன் எம். பி. மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

அரசாங்கம் அதன் அரசியல் பலத்தையும் படைகளின் ஆதிக்கத்தையும் ஒன்றுதிரட்டி, இதுவோர் சிங்கள பௌத்த நாடு என்று நிறுவுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. எனவே, தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்களில் பௌத்த சிதைவுகள் இருப்பதாகக்கூறி முன்னெடுக்கப்பட்டுவரும் அகழ்வாராய்வுகளும் இலங்கையை தனிச் சிங்கள -பௌத்த நாடாகப் பிரகடனப்படுத்துவதற்கான முன்நகர்வேயாகும். வரலாற்று ரீதியான சான்றாதாரங்களின் அடிப்படையில் நோக்குகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாகர் வழிவந்த தமிழர்களே பூர்வீக குடிகளாக வாழ்ந்திருக்கின்றார்கள்.



அதுமாத்திரமன்றி வரலாற்றைப் பொறுத்தமட்டில் ஆரம்பகாலங்களில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்ததாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. அவ்வாறிருக்கையில் மஹிந்த தேரர், சங்கமித்தை போன்றோரின் இலங்கைக்கான வருகை உள்ளடங்கலாக சிலகுழுக்களின் வருகையைக் காரணங்காட்டி, இலங்கையை ஒரு சிங்கள - பௌத்த நாடாக நிறுவ முயற்சிக்கின்றார்கள்.

மறுபுறம் கடந்த காலங்களில் வரலாற்றாசிரியர்களாலும் தொல்லியலாளர்களாலும் எமது நாட்டின் தென்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று ரீதியான ஆய்வுகள் மற்றும் அகழ்வாராய்வுகளுக்குச் சமஅளவிலான ஆய்வுகள் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை.

அதுமாத்திரமன்றி தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்கள் குறித்த தொல்லியல் சான்றாதாரங்களையும் கருத்துக்களையும் வெளியிடுவதற்குப் பலரும் தயங்குகின்றார்கள். மறுபுறம் இலங்கையில் தமிழர்களின் பூர்வீகம் தொடர்பில் புலம்பெயர் தமிழர்களால் எழுதப்படும் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களில் உண்மையான தகவல்கள் திரிபுபடுத்தி எழுதப்படுகின்றன. ஆகவே, எமது அடையாளத்தை நிலைநிறுத்துவதற்கான முயற்சிகளின்போது நாம் இவ்விடயங்கள் குறித்தும் கரிசனை கொள்ளவேண்டியிருக்கின்றது - என்றார். (ஐ)

# கொக்குவில் வாள்வெட்டில் இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், நவ. 08

கொக்குவில் கேணியடி பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் நடந்த இந்த சம்பவத்தில் கேணியடியைச் சேர்ந்த உதயகுமார் ரதீபன் என்ற இளைஞரே இவ்வாறு படுகாயமடைந்தார்.

ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த 3 பேர் இளைஞர்மீது வாள்வெட்டு தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது. இதில், அவர் கை, கால் பகுதிகளில் காயமடைந்தார். அப்பகுதியினரால் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-03)





# மண்டைதீவில் முன்பள்ளி கட்டடம் திறந்து வைப்பு!

யாழ்ப்பாணம், நவ. 08

மண்டைதீவு புனித பேதுரு வானர் முன்பள்ளியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

மண்டைதீவு கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் புலம்பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் இந்த முன்பள்ளி கட்டடம் அமைக்கப்பட்டது.

இதன் திறப்பு விழா நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மண்டைதீவு பங்குத்தந்தை வண. அந்தோணி தாஸ், அருட்சகோதரி மற்றும் வேலணை பிரதேச சபை உறுப்பினர்களான சிறீபத்மநாதன் , திருமதி தங்கராணி தேவாலயத்தின் நிர்வாகிகள் , மண்டைதீவு பங்கு மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# சிங்கள - பௌத்த மயமாக்கலுக்கு தீயாய் வேலை செய்கிறார் அங்கஜன்!

## கஜதீபன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 08

தமிழரின் பாரம்பரிய நிலங்களில் சிங்கள - பௌத்தமயமாக்கலை மேற்கொள்வதற்கு அங்கஜன் இராமநாதன் எம். பி. தீவிரமாக வேலை செய்கின்றார் என்று முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் குற்றம் சாட்டியுள்ளார்.

காரைநகரில் தொல்பொருள் ஆய்வு என்ற பெயரில் சென்றவர்களை அந்தப் பகுதி மக்கள் விரட்டினர். இது தொடர்பில் கருத்துரைத்த போதே கஜதீபன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கோட்டபாய அரசாங்கம் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை இரண்டு மூன்று மடங்காக அதிகரித்து மக்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்கு உட்படுத்திய நிலையில் சிங்கள மக்களின் கடும் எதிர்ப்பை சமாளிப்பதற்கும் மக்களை திசை திருப்புவதற்கும் தனி பௌத்த சிங்களம் என்ற கோட்பாட்டை கையிலெடுத்துள்ளது.

இதிலொரு பகுதியாகத்தான் தேசிய மரபுரிமைகள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க வடக்கில் முகாமிட்டு தமிழர்களின் பூர்வீக நிலங்களில் சிங்கள - பௌத்த சின்னங்கள் உள்ளதாக அடையாளப்படுத்த முற்படுகின்றார்.

அதற்கு பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தீவிரமாக வேலை செய்வது வெட்கக் கேடானது.

இந்த அரசாங்கத்தின் முக்கிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட சிங்கள - பௌத்த மயமாக்கலுக்கு துணை போகக்கூடாது என்றுதான் இந்த விடயங்களில் பங்கெடுக்காமல் பின்நிற்கின்றார் என்று எண்ணுகின்றோம். ஆனால், அங்கஜன் இராமநாதன் எமது மக்களை முட்டாள்கள் என நினைத்து இவ்வாறான செயல்களை செயவதொன்றும் வேடிக்கையான விடயமல்ல. அவர் தனது வியாபாரத்திற்காக எமது மக்களை மட்டுமல்ல தமிழர்களின் அடையாளங்களைக்கூட மாற்றுவதற்கு துணைபோவார் என்பது சாதாரணமானது.

எனவே, எமது மக்கள் தமது பூர்வீக நிலங்களை விட்டுக் கொடுக்க கூடாது என்று காரைநகரில் துணிவுடன் செயற்பட்டது போன்று அனைத்து மக்களும் விழிப்புடன் இருக்க வேண்டும் - என்றார். (ஐ)

# சத்துருகொண்டான் நினைவேந்தல்; மட்டு. மாநகர மேயரிடம் விசாரணை

மட்டக்களப்பு, நவ. 08

மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி. சரவணபவனிடம் நேற்றுமுன்தினம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த செப்ரெம்பர் 9ஆம் தகிதி சத்துருக்கொண்டான் நினைவுத்தூபியில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டமை தொடர்பிலேயே அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன என்று அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட சத்துருக்கொண்டான் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலிருந்து இராணுவத்தினராலும் ஊர்காவல் படையினராலும் கொண்டுசெல்லப்பட்டு படுகொலைசெய்யப்பட்ட 186 பேரின் நினைவாக சத்துருக்கொண்டானில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியில் தான் அஞ்சலி செலுத்தினார் எனவும், சிறு பிள்ளைகள், கர்ப்பிணி பெண்கள் உட்பட 186பேரின் நினைவாகவே இந்த நினைவுத்தூபியுள்ளதாகவும் அதனால் வருடாந்தம் அதில் அஞ்சலி செய்வதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்தாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த படுகொலை தொடர்பில் யார் கொலையாளிகள் என்று சாட்சியங்கள்கூட பதிவு செய்யப்பட்ட நிலையில் அது தொடர்பில் எந்த விசாரணைகளையும் முன்னெடுக்காத பொலிஸார் குறித்த நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தியமைக்காக விசாரணை செய்வதாகவும் தெரிவித்த முதல்வர் இது தொடர்பான தனது அதிருப்தியை பொலிஸாரிடம் தெரிவித்தாரெனவும் கூறினார். (ஐ)

# தப்பிச் சென்ற இரு கைதிகள் பொலிஸாரால் மடக்கிப்பிடிப்பு

கொழும்பு, நவ. 08

வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட இரு கைதிகள், பொல்கஹவல மெத்தலந்த பிரதேசத்தில் வைத்து சிறைச்சாலை பஸ்ஸிலிருந்து தப்பிச் சென்று மலசலகூடமொன்றில் மறைந்திருந்த நிலையில் பொல்கஹவல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிறைக்கைதிகளை அழைத்துக்கொண்டு மூன்று பஸ்கள் சென்றுள்ள நிலையில், கொழும்பு - குருநாகல் பிரதான வீதி, பொல்கஹவெல மெத்தலந்த பிரசேத்தில் வைத்து ஒரு பஸ்ஸில் இருந்த கைதிகள், பஸ்ஸூக்குள் கழகம் விளைவித்துள்ளனர்.

இதையடுத்து சிறைச்சாலை அதிகாரிகள் பஸ்ஸைத் திறந்து பார்க்க முற்பட்டபோதே, கைதிகள் பஸ்ஸிலிருந்து தப்பிச் செல்ல முயற்சித்துள்ளனர்.

இதன்போது இரு கைதிகள் கைவிலங்குகளுடன் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த இருவரும் கொஸ்கலே பிரதேச சபைக்குட்பட்ட தகனசாலையின் மலசலகூடத்தில் மறைந்திருந்த நிலையிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகளும் சிறைச்சாலை அதிகாரிகளும் இணைந்து இரண்டு மணித்தியாலங்கள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையைடுத்து கைதிகள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)





# பொருட்கள் விலையேற்றத்தை கண்டித்து நேற்று போராட்டம்!

நுவரெலியா, நவ. 08

**அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும் வரவு - செலவு திட்டம் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் தமிழ் முற்போக்கு கூட்டணி நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.**

நுவரெலியா பொகவந்தலாவை நகரில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமான இந்தப் போராட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வீ. இராதாகிருஷ்ணன், பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார், உதயகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

அத்துடன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் போராட்டத்தில் பங்கேற்று விலையேற்றத்தைக் கண்டித்தனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பொகவந்தலாவை நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் நேற்று மூடப்பட்டிருந்தன.

அத்தியாவசியப் பொருட்களின் விலையை உடனடியாக குறைக்கவும், வரவு - செலவுத் திட்டத்தில் நிவாரணம் வேண்டும், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும், அவர்களின் தொழில் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும், விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் உரம் வழங்க வேண்டும், அதற்கான விசேட பொறிமுறை அவசியம் என்றவாறான கோஷங்களை போராட்டக்காரர்கள் எழுப்பினர். (ஐ)

# மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு!

கொழும்பு, நவ. 08

உர நெருக்கடியால் பொருளாதார மையங்களுக்கு காய்கறிகள் வரத்தும் வெகுவாக குறைந்துள்ளது. தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு மரக்கறி வரத்தும் குறைந்துள்ளது.

பேலியகொடை மெனிங் சந்தைக்கான மரக்கறி வரத்து சுமார் 60 வீதத்தால் குறைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், காய்கறிகளின் கையிருப்பு தொடர்ந்து சரிந்தால், காய்கறிகளை வாங்க வரிசையில் நிற்கும் நிலை ஏற்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மரக்கறி கையிருப்பு குறைவினால் மரக்கறிகளின் மொத்த விலையும் அதிகரித்துள்ளதாக மெனிங் தொழில்சங்கத்தின் தலைவர் எச். எம். உபாசேன தெரிவித்தார்.

# மிதிவெடிகள் அகற்றப்பட்ட காணிகள் உரிமையாளர்களிடம் வழங்கப்பட்டன!

கிளிநொச்சி, நவ. 08

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மிதிவெடி அகற்றப்பட்ட 2 ஆயிரத்து 186 ஏக்கர் காணிகள் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் மிதிவெடி அகற்றப்பட்ட காணிகள், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த ஆகியோரால் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன. 270 குடும்பங்கள் வசிப்பதற்காக இந்தக் காணி விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் மிதிவெடி அகற்றும் நடவடிக்கையின் போது 87 ஆயிரத்திற்கும் அதிகமான மிதிவெடிகளும், ஒரு இலட்சத்து 96 ஆயிரத்து 985 தோட்டாக்களும் ஆயுதங்களும் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பால்நிலை சமத்துவம் முன்மொழிவு கஜேந்திரகுமாரிடம் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 08

பால்நிலை சமத்துவம் பேணும் கற்கை நெறியை பாடத் திட்டத்தில் உள்வாங்குவது தொடர்பான முன் மொழிவொன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணி அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் கையளித்தது.

முன்பள்ளியிலிருந்தே பாடத்திட்டத்தின் மூலம் பால்நிலை சமத்துவத்தை கற்பிக்கப்படுவதற்கான கருப்பொருளில் அமைந்த இந்த முன்மொழிவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவி வாசுகி சுதாகர் மற்றும் மகளிர் அணி செயலாளர் கிருபா கிரிதரன் ஆகியோர் கஜேந்திரகுமாரிடம் நேற்று முன்தினம் கையளித்தனர். (ஐ)



# அமைச்சரின் கொடும்பாவியை மட்டுமல்ல அரசாங்கத்தையே கொளுத்த வேண்டும்!

## மனோ கணேசன் எம். பி.

நுவரெலியா, நவ. 08

“விவசாயத்துறை அமைச்சரின் கொடும்பாவியை மட்டுமல்ல ஒட்டு மொத்த இந்த அரசையுமே கொளுத்தி, வீட்டுக்கு விரட்டியடிக்க வேண்டும்.” என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், வரவு -செலவு திட்டம் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் பொகவந்தலாவையில் நேற்று இடம்பெற்ற கவனவீர்ப்பில் பங்கேற்று பேசிய போதே அவர் இதனைக் கூறினார்.

“கொரோனாவுக்கு மத்தியிலும் இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் இலங்கைக்கு கடன் கொடுத்தன. அந்த நாடுகள் பொருளாதாரத்தை முகாமை செய்யவில்லையா? அப்படியானால் எமது நாட்டு அரசாங்கத்துக்கு மட்டும் ஏன் தடுமாற்றம்?

தேசிய உற்பத்தியில் புரட்சி செய்யபோவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். மஞ்சளுக்கு தடை விதிக்கப்பட்டது. நாட்டில் தற்போது மஞ்சள் இருக்கின்றதா? பாசி பயறு, உளுந்து உள்ளிட்ட பொருட்களும் இல்லை. அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது.

விவசாய அமைச்சரின் மட்டுமல்ல இராஜாங்க அமைச்சரின் கொடும்பாவியையும் எரிக்க வேண்டும் என்கின்றனர். இவ்விருவரின் மட்டுமல்ல ஒட்டு மொத்த அரசையுமே கொளுத்தி, வீட்டுக்கு அனுப்ப வேண்டும் - என்றார். (ஐ)

# பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு புதிலாக மக்களை திருப்புகிறது அரசு

## ஹர்ஷ டி சில்வா எம். பி. சாடல்

கொழும்பு, நவ. 08

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக, மக்களின் கவனத்தைத் திசை திருப்பு வதில் மட்டுமே அரசாங்கம் முனைப்பாக இருக்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இதனை தெரிவித்தார்.

அரசாங்கத்தின் உள்நோக்கம் குறித்து பொது மக்கள் தற்போது அறிந்துள்ளதாகவும், அதனால் அரசாங்கத்தின் சூழ்ச்சிக்கு பலியாக மாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் ஊடகங்களுக்கு வாரந்தோறும் புதிய தலைப்புகளை உருவாக்கி வருகிறது. அரசாங்கம் கையாளும் முக்கிய திசைதிருப்பல் உத்திகளில் ஒன்று கிரிக்கெட் என தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தற்போதைய அரசாங்கத்தின் இயலாமைகள் பாரிய சுமையை மக்களுக்கு உள்ளாகியுள்ள குடிமக்கள் நன்கு அறிந்திருப்பதால், ஜனாதிபதியால் தனது இலக்கை இப்போது அடைய முடியாது என்பதை அறிந்திருக் கிறார்கள்.

லிட்ரோ எரிவாயு லங்கா லிமிடெட் நிறுவனத்தின் தற்போதைய மற்றும் முன்னாள் தலைவர்களை பொது நிறுவ



னங்கள் தொடர்பான குழுவின் முன்னிலையில் அழைப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய லிட்ரோ தலைவர் தெஷார ஜயசிங்க அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் இருவரிடமும் விசாரணை நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

லிட்ரோ எரிவாயு லங்கா லிமிடெட் நிறுவனத்திற்கு எரிவாயு வழங்கும் நிறுவனத்திற்கு தற்போது வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தை மேலும் இரண்டு வருடங்கள் நீட்டிக்குமாறு குறிப்பிட்ட மாபியா ஒன்றின் பின்னணியில் உள்ள நபர்களிடமிருந்து தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக லிட்ரோ தலைவர் தெஷார ஜயசிங்க கூறியிருந்தார்.

கோரிக்கைகள் தொடர்பாக கோப் தலைவரிடம் கேள்வி கேட்கும் என பாராளுமன்ற உறுப்பினர் டி சில்வா தெரிவித்தார். சம்மன் அனுப்பப்பட்டால், அவர்கள் பாராளுமன்றத்தில் ஆஜராகி பதில் அளிக்க வேண்டும் - என்றார்.

# கொரோனா தொற்று, மரணம் கிழக்கில் மீண்டும் அதிகரிப்பு

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்



மட்டக்களப்பு, நவ. 08

**கிழக்கு மாகாணத்தில் கோவிட் - 19 தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 55ஆயிரத்தையும் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை ஆயிரத்தையும் கடந்துள்ளது என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்.**

நேற்றைய தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், செப்ரெம்பர் மாதத்தின் இறுதி பகுதியில் கிழக்கில் ஆயிரம் புதிய கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். ஒக்ரோபர் மாதத்தில் இந்த எண்ணிக்கை 800 தொடக்கம் 600 ஆக குறைந்து காணப்பட்டாலும் ஒக்ரோபர் மாதம் இறுதி வாரத்தில் 700 தொற்றாளர்களாக அதிகரித்து காணப்பட்டது.

அம்பாறை பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நோயாளிகளின் எண்ணிக்கையில் குறைவதை காணக்கூடியதாக இருந்தாலும் ஏனைய பகுதிகளிலும் சிறிது குறைந்து இருந்தாலும் அது கடந்த மாத இறுதிப் பகுதியில் சற்று அதிகரித்து காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கிழக்கு மாகாணத்தில் கொரோனா தடுப்பு மருந்து வழங்கும் செயல்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு கொண்டிருக்கும் நிலையில் முதலாவது தடுப்பூசி 20 வயதுக்கு மேற்பட்டோரில் 93 சதவீத மாணவர்களுக்கும், இரண்டாம் கட்ட தடுப்பூசி 82 சதவீதமானவர்களுக்கும், 16 தொடக்கம் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு 93 சத வீதம் பைசர் கொரோனா தடுப்பு மருந்து செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், முன்னிலை உத்தியோகத்தர்களுக்கான மூன்றாவது பூஸ்டர் பைசர் தடுப்பு மருந்து வழங்கும் செயல்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

எனினும், மக்கள் முழுமையாக தடுப்பூசியை செலுத்தாமையாலும், சுகாதாரப் பழக்கவழக்கங்களை முறையாகக் கைக்கொள்ளாமையாலும் கிழக்கு மாகாணத்தில் தொற்றாளர் எண்ணிக்கையும் மரணமும் மீண்டும் அதிகரித்து வருகின்றது - என்றார். (ஐ)

# பாடசாலைகள் இன்று ஆரம்பம்!

கொழும்பு, நவ. 08

தொற்றுநோய் காரணமாக மூடப்பட்ட பாடசாலைகளை மீளத் திறக்கும் திட்டத்தின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன.

இதன்படி 10, 11, 12 மற்றும் 13 ஆம் வகுப்புகளுக்கான கற்பித்தல் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய மாணவர்கள் பாடசாலைக்கு அனுப்பப்படுவதை பெற்றோர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்று கல்வி அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, ஆசிரியர் - அதிபர் சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு கோரி எதிர்வரும் செவ்வாய்கிழமை தேசிய போராட்ட தினமாக பிரகடனப்படுத்த ஆசிரியர் - அதிபர் தொழில்சங்க கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. ஒவ்வொரு வலயக் கல்வி அலுவலகம் முன்பாகவும் இந்தப் போராட்டம் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# இரு மாதங்களில் நாட்டை கொரோனா அலை தாக்கும்!

கொழும்பு, நவ. 08

அடுத்த இரு மாதங்களில் மேலும் ஒரு கொரோனா தொற்று அலைக்கு நாடு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

அரச நிறுவனங்களிலும் சுகாதார நடைமுறைகள் புறக்கணிக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது என்று அந்த சங்கத்தின் செயல்குழு உறுப்பினர் மருத்துவர் ருவன் ஜயசூரிய தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட பின்னர் கொரோனா தொற்று முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட நிலையில் போராட்டங்கள் மற்றும் அதிகளவில் மக்களின் ஒன்றுகூடல்களை அவதானிக்க முடிந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இந்த நிலைமை காரணமாக எதிர்வரும் காலங்களில் இலங்கையானது கொரோனா வைரஸின் மற்றுமோர் அலையை எதிர்கொள்ளக்கூடும் என்றும் வைத்தியர் ருவன் ஜயசூரிய கூறினார்.

எவ்வாறாயினும், இலங்கையின் 60 வீதத்துக்கும் அதிகமானவர்கள் தடுப்பூசியை செலுத்திக் கொண்டுள்ளமையால் வைரஸிலிருந்து பாது காப்பாக இருக்க முடியும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும் வைரஸின் புதிய மாறுபாடுகள் உருவாகி வருவதாகக் கூறிய மருத்துவர் ருவன் ஜயசூரிய, பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார். (ஐ)

# மக்கள் எழுச்சி மூலம் அரசை விரட்டலாம்

நுவரெலியா, நவ. 08

“மக்கள் எழுச்சி மூலமே இந்த அரசை விரட்டியடிக்க முடியும். சஜித் பிரேமதாஸ தலைமையில் மக்களுக்கான ஓர் அரசு உருவாகும்.” என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், வரவு -செலவு திட்டம் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் பொகவந்தலாவையில் நேற்று இடம்பெற்ற கவனவீர்ப்பில் பங்கேற்று பேசிய போதே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“பொய்யுரைத்து அதன் மூலம் ஆட்சியை முன்னெடுப்பதற்கே இந்த அரசு முயற்சிக்கின்றது. இன்று பொய் கூறுவதில் சிறப்பு தேர்ச்சியும் பெற்றுள்ளது.

நாட்டு மக்களுக்கு தாங்கிக் கொள்ள முடியாத வகையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால்தான் மக்கள் வீதியில் இறங்கி போராடுகின்றனர். மக்கள் போராட்டங்கள் மூலமே இந்த அரசை விரட்டியடிக்க முடியும்.

சஜித் தலைமையில் மக்களுக்கு நன்மை பயக்கும் அரசு ஒன்றை நாம் உருவாக்கு வோம். - என்றார். (ஐ)

# தமிழர் தரப்பை பயன்படுத்தி இலங்கைமீது வலைவிரிப்பு?

## வல்லரசுகள் வகுக்கும் உபாயம் என்ன?

பனங்காட்டான்

இலங்கையின் அரசியல் நிகழ்வுகள் எதிர்பார்க்கப் பட்டதும் எதிர்பார்க்கப்படாதது மான இரண்டு நிலைக்குட்பட்ட தான நெருக்குவாரத்துள் அலங் கோலப்படுகிறது. இது விடயத்தில் தமிழர் தேசமும் சிங்கள தேசமும் வேறுபடவில்லை.

சிங்கள தேசத்தில் அரசாளும் கூட் டின் பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான வேறுபாடுகளும் குளறுபடிகளும் ஆட் டம் போடுவதுபோல தமிழர் தேசிய அரசியல் போக்கும் சந்திக்கு வந்து தள்ளாடுகிறது.

கோட்டாபயவின் இராணுவ போக்கு சிங்கள தேச சீத்துவக்கேடுக்குக் கார ணம். சம்பந்தனின் முதுமையும் இயலா மையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிச்சல்பிடுங்கலுக்கும் நீயா நானா போட் டிக்கும் காரணம்.

இதற்கும் அப்பால் சர்வதேசம் தங்கள் கைகளையும் கால்களையும் இலங் கைக்குள் புகுத்தி தம்பாட்டுக்கு காய் களை நகர்த்துகிறது. சீனாவின் சேதனப் பசளை தரமற்றது என்று கூறியதால் இலங்கை அரசின் மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் சேர்த்து சீனா தனது சண்டித்தனத்தைக் காட்டுகிறது. சீனாவிடம் கடன்பட்ட இலங்கை, நிலைமையைச் சமாளிக்க முயல்கிறது.

இவ்வேளையில் சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்த அமெரிக்காவும் இந்தியாவும் தனித்தும் கூட்டாகவும் தங்கள் வலைகளை விரிக்கின்றன. இதற்கு அவர்களுக்குத் தேவைப்படுவது தமிழர் தரப்பு. இவர்கள் இல்லையேல் அவர்கள் பாடு திண்டாட்டம்.

உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு, விலைகள் அதிகரிப்பு, எரிபொரு ளின்மை, விவசாயிகள் பாதிப்பு, சம்பளக் கோரிக்கை என்பவற்றால் அலுவலகங் களிலும் தோட்டம் துரவுகளிலும் இருக்க வேண்டியவர்கள் பதாதை களுடன் வீதிகளில் நிற்கிறார்கள். காணா மலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் கவனவீர்ப்பு தொடர்கிறது.

அரிசி இல்லையென்றால் மரவள்ளிக் கிழங்கையும் பாசிப் பயற்றையும் சாப் பிடுங்கள் என்று இலவச ஆலோசனை வழங்கியுள்ளார் ராஜபக்ஷ குடும்பத்தின் மூத்தவரான அமைச்சர் சமல் ராஜபக்ஷ. சிறீமாவோ பண்டாரநாயக்காவின் 1970ஆம் ஆண்டுக்கால ஆட்சிக் கோலத்தை இது நினைவூட்டுகிறது. குரக்கன் சால்வைக்காரருக்கு ஏனோ குரக்கனைச் சாப்பிடுமாறு கூற மனம் வரவில்லை.

அமைச்சர்களின் உள்ளக மோதல் களால் பல அமைச்சுகள் முடங்கியுள் ளன. சில அமைச்சர்களுக்கும் அவர் களின் செயலாளர்களுக்குமிடையில் மோதல் நீடிக்கிறது. அமைச்சுகளிலும் அரச கூட்டுத்தாபனங்களிலும் ஆலோ சனைக் குழுக்களிலும் விசாரணைச் சபைகளிலும் இதுவரை படைத்துறை அதிகாரிகளையே கோட்டாபய நியமித்து வந்தார். சுமார் நாற்பதுக்கும் அதிகமான அதியுயர் பதவிகளில் படைத்துறையினர் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இப்போது நம்பகமான படை அதிகா ரிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பௌத்த பிக்குகள் பக்கம் கோட்ட பாயவின் பார்வை திரும்பியுள்ளது. அடுத்தடுத்து சில கதிரைகளில் பிக்குகள் அமர்த்தப்படுகின்றனர்.

“ஒரே நாடு ஒரே சட்டம்” ஜனாதிபதி செயலணியின் தலைவராக கலகொட அத்துல ஞானசார தேரர் மூன்று வாரங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட் டார். தமிழர் எவரும் இடம்பெறாத பதின்மூன்று பேர் கொண்ட குழுவுக்கு பிக்கு தலைமையாகியுள்ளார். இப்பத



> சர்வதேசம் தங்கள் கைகளையும் கால்களையும் இலங்கைக்குள் புகுத்தி தம்பாட்டுக்கு காய் களை நகர்த்துகிறது. சீனாவின் சேதனப் பசளை தரமற்றது என்று கூறியதால் இலங்கை அரசின் மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் சேர்த்து சீனா தனது சண்டித்தனத்தைக் காட்டுகிறது. சீனாவிடம் கடன்பட்ட இலங்கை, நிலைமையைச் சமாளிக்க முயல்கிறது.

விக்கான இவருக்குரிய ஒரேயொரு சிறப்புத் தகுதி, நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சட்டத்தை மதிக்காத குற்றத் துக்காக சிறைத்தண்டனை பெற்று, ஜனாதிபதியின் பாவமன்னிப்புப் பெற்ற சிங்கள தேசபக்தர் என்பது.

இவரது நியமன சலசலப்பு நீங்கு வதற்குள், பரபரப்பாக அரசியல் பேசி வரும் இன்னொரு பௌத்த பிக்குவை மற்றொரு உயர்பதவிக்கு கோதபாய நியமித்துள்ளார். ராஜபக்ஷக்களை ஆட்சிக் கட்டிலுக்கு ஏற்றியவரும், சமீப காலமாக கோட்டாபயவை கடுமையாக விமர்சித்து வருபவருமான முருத் தட்டுவே ஆனந்ததேரர், கொழும்பு பல் கலைக்கழகத்தின் வேந்தராக நியமிக்கப் பட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆயுட்கால விசுவாசியான ஆனந்ததேரரின் கொழும்பு அபயராமை விகாரையே இவர்களது பொதுஜன பெரமுன கட்சியின் தலைமைப்பீடம். கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் இக்கட்சியின் வெற்றிக்கு முழு மூச்சாக உழைத்த ஆனந்ததேரர், கடந்த சில மாதங்களாக கோட்டாபயவை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்றும், மகிந்தவை அரச பொறுப்பினை ஏற்குமாறும் பகிரங்கமாகக் கோரி வருபவர்.

ஆனந்ததேரரின் வாயில் ஓர் எலும்புத் துண்டைக் கவ்வக்கொடுத்துள்ளார் கோதபாய. பல்கலைக்கழக சமூகத்தின் கடும் எதிர்ப்பையும் மீறி வேந்தர் பதவியை ஏற்றுள்ள ஆனந்ததேரர், இப்பதவியினூடாக தம்மை எவரும் கட்டுப்படுத்த முடியாது என்று சூளு ரைத்துள்ளார். பொறுத்திருந்து பார்ப் போம் - யார் வெல்லப் போகிறார் என்று?

ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோவில் இடம்பெற்ற பருவநிலை மாநாட்டுக்குச் சென்ற கோட்டாபயவுக்கு புலம்பெயர் ஈழத்தமிழர் சமூகம் “மாண்புமிகு மரியாதை” வழங்கியதை கொழும்பு ஊடகங்கள் அச்சம் காரணமாகப் போலும் அமுக்கிவிட்டன. எனினும், ஐரோப்பிய ஊடகங்கள் தங்கள் தர் மத்தை ஓரளவுக்கு நிறைவேற்றின. முழுப் பக்க விளம்பரங்கள், விழிப்புணர்வு வாசக டிஜிற்றல் காட்சிப்படுத்தல்கள் கிளாஸ்கோ நகரை ஒரு வாரமாக மின்ன லடிக்கச் செய்தன.

இந்தச் செயற்பாடுகளின் மறுபக்க மாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற முக்கிய அரசியல் அரங்கொன்று நோக் கப்படுகிறது. தமிழ்த் தேசிய கட்சிகளின் கூட்டு முயற்சி என்ற பெயரில் இந்த மாதம் 2ஆம் திகதி இடம்பெற்ற இந்த அரங்கம் மனோ கணேசன், ராவூப் ஹக்கீம் ஆகியோர் பங்கேற்றதால் “தமிழ் தேசிய“ என்ற அடையாளத்திலிருந்து விலகி அல்லது விடுபட்டு தமிழர் - முஸ்லிம் தரப்புகளின் ஒற்றுமை அரங்க மாக மாறிவிட்டதென்பதை இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது.

ரெலோவின் முன்னெடுப்பில் புளொட்டின் அனுசரணையுடன் (இவை யிரண்டும் கூட்டமைப்பின் பங்காளிகள்) சில வாரங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப் பட்ட தமிழ்த் தேசிய கட்சிகளின் கூட்டு என்ற இணைப்பில் ஈ. பி. ஆர். எல். எவ்., தமிழ்த் தேசிய கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியனவும் சேர்ந்தன. 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்து வது உட்பட முக்கிய விடயங்களில் உருவான இந்தக் கூட்டுக்கு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராஜா தமது ஆதரவை பகிரங்கமாக வழங்கி வந்தார்.

சுமந்திரனின் தன்னிச்சைப் போக்குக்கு கூட்டமைப்பைப் பயன்படுத்துவதை தடுக்க வேண்டுமென்பதே ரெலோ, புளொட் மற்றும் மூன்று தரப்பினரதும் அடிப்படை இலக்கு என்பதை இங்கு சொல்லித்தான் தெரிய வேண்டுமென்ப தில்லை. மாவையரின் ஆதரவும் இதே அடிப்படையில் ஆனது தான்.

சம்பந்தனை நேரடியாக சந்தித்த செல்வம் அடைக்கலநாதன் இரண்டாம் திகதி கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தும் அவர் பங்குபற்றவில்லை. சுமந்திரனை அழைக்காதமை இதற்கான காரணமாக இருக்கலாம். இதற்கிடையில் அவசர மாகக் கூடிய தமிழரசுக் கட்சியின் மத்திய குழு, ரெலோவின் கூட்டத்தில் பங்குபற்றுவதில்லையென முடிவு எடுத்ததுடன், ஆறாம் திகதி மீண்டும் கூடி அடுத்த நடவடிக்கை பற்றி ஆலோசிப்பதென தீர்மானித்தது.

தமிழரசுக் கட்சி இரண்டாம் திகதிக் கூட்டத்தில் பங்குபற்றாது என்ற முடிவை ரெலோவுக்கு அறிவிக்காது மறைத்த மாவையர், ரெலோவின் முடிவை தாங்கள் ஆதரிப்பதாகவும், இக்கூட்டத்தை ஆறாம் திகதிக்குப் பின்னர் நடத்துமாறும் வேண்டினார். இது தமிழ் அரசு எடுத்த முடிவுக்கு எதிர் மாறானது. மாவையர் ஏதோ குழப்பத்தில் இருக்கிறார் என்று சில வாரங்களுக்கு முன்னர் தமிழ் அரசின் மூத்த துணைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தது உண்மையாகியது.

இரண்டாம் திகதிக் கூட்டத்துக்கு மனோ கணேசனின் ஆலோசனைக்கு இணங்க ராவூப் ஹக்கீம் தலைமை தாங்கினார். மொத்தத்தில் தமிழ்த் தேசிய கட்சிகளின் ஐக்கியம் என்பது வேறு திசைக்கு மாற்றப்பட்டுள்ளது. இதுபற்றி மேலும் விளிப்பதற்கு முன்னர் ஒரு விட யம் முக்கியமானது.

புதிதாக உருவாகும் கூட்டில் இணைந்தால் தங்கள் தலைமைப் பதவி பறிபோகலாமென்று தமிழ் அரசுக் கட்சி அஞ்சுவது தெரிகிறது. நிலையான அரசியல் கோட்பாட்டின் அடிப்படை யில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இதில் இணைய மறுக்கிறது. இவைகளில் மாற்றம் ஏற்படும் சாத்தியம் காணப்படவில்லை.

1987ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையிலான பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டுமென்பதில் இந்தியா செயற்படுவதைக் காட்டுகிறது. இவ்விட யத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தவிர மற்றைய தமிழ்த் தேசிய கட்சிகள் இந்தியாவை நம்புவதும் தெரிகிறது.

ஆனால், இந்திய வெளியுறவுச் செய லர் ஹர்சவர்தனுடன் நடத்திய சந்திப் பின்போது, இரண்டு தரப்புத் தீர்மானங் கள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தி, பெரும்பான்மையான மக்களின் விருப்பத் துக்கு அமைய அவற்றை நடைமுறைப் படுத்துவது அவசியமென கோட்டாபய தெரிவித்ததை இந்தியாவும் தமிழர் தரப்பும் நினை விற்கொள்ள வேண்டும்.

பெரும்பான்மையான மக்கள் என்று கோட்டாபய குறிப்பிடுவது, சிங்கள பௌத்த மக்களின் விருப்பம் அவசியம் என்பதை. அதனைக் கண்டறிவது என்று அவர் குறிப்பிடுவது சர்வஜன வாக் கெடுப்பை. இதன் முடிவு என்னவாக இருக்கு மென்பது எவருக்கும் தெரியாததல்ல.

இதற்கிடையில், இந்தியத் தூதுவர் அடுத்த வாரம் கூட்டமைப்பினருடன் மீண்டும் பேசவுள்ளார் என்ற தகவலும், கூட்டமைப்பின் சுமந்திரன் தலைமையிலான தமிழ் சட்டவாளர் குழுவொன்று இம்மாத நடுப்பகுதியில் அமெரிக்காவின் அழைப்பின் பேரில் அங்கு செல்லவுள்ளது என்ற தகவலும் கசிந்துள்ளது. சீனா-அமெரிக்கா-இந் தியா ஆகிய முத்தரப்பின் உதைபந் தாட்டக் களமாக இலங்கை அமைந் துள்ளது. இதில் அவர்களின் உதைபந் தாக தமிழர் தரப்பு நீள்கிறது.

கடந்த வாரப் பத்தியில் அமெரிக்க முன்னாள் செயலாளர் டீன் அச்சேசன் என்றோ கூறிய, “நாடுகள் நல்லுறவை நாடுபவை அன்று, அவை தம்நலன் நாடுபவை மட்டுமே” என்ற பொருள் செறிந்த வாசகத்தையே மீண்டும் இங்கு பதிவு செய்வது பொருத்தமாகவுள்ளது.

# சீனாவின் ‘நில எல்லை சட்டம்’ இந்தியாவை குறிவைக்கும் செயல்பாடு?

ஆ.பழனியப்பன்



இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான எல்லைப் பதற்றம் நீறுபூத்த நெருப்பாக இருந்துவரும் சூழலில், ‘நில எல்லைச் சட்டம்’ என்கிற சர்ச்சைக்குரிய புதிய சட்டம் ஒன்றை சீனா கொண்டுவந்திருக்கிறது. இது இரு நாடுகளுக்கு இடையில், பல்வேறு சிக்கல்களையும், பிரச்னைகளையும் உண்டாக்கும் என்று இந்தியா கவலையுடன் பார்க்கிறது!

டோக்லாம் பகுதியில் இந்தியா- சீனா படைகளுக்கிடையே மோதல்கள், சிக்கிம் வடக்குப் பகுதியிலுள்ள நாதுலாவில் இரு நாட்டுப் படைகளுக்குமிடையே கைகலப்பு, கல்வான் பள்ளத்தாக்கில் நடந்த மோதலில் இரு தரப்பிலும் உயிரிழப்புகள் எனச் சமீபகாலமாக இந்தியா -சீனா எல்லையில் பதற்றம் நிலவிவருகிறது. இதனால், இரு நாடுகளுக்குமிடையே நாளுக்கு நாள் பகைமை அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

2020 ஆம் ஆண்டு, ஜூன் மாதம், கல்வான் பகுதியில் இரு நாட்டு இராணுவத்தினருக்குமிடையே நிகழ்ந்த மோதல் சம்பவங்களுக்குப் பிறகு, இந்திய நிலப் பகுதியிலிருந்து சீனப் படைகள் வாபஸ் பெறப்பட்டன. ஆனாலும், அதன் பிறகு ராணுவ அளவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் இல்லை. இந்த நிலையில், மேலும் நிலைமையைச் சிக்கலாக்கும் வகையில், புதிதாக ஒரு சட்டத்தை சீனா கொண்டுவருகிறது.

இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், பூட்டான், கஜகிஸ்தான், கிர்கிஸ்தான், லாவோஸ், மங்கோலியா, மியான்மர், வட கொரியா, ரஷ்யா, தஜிகிஸ்தான், வியட்நாம் என 14 நாடுகளுடன் 22,457 கி.மீ எல்லையை சீனா பகிர்ந்துகொள்கிறது. இதில், இந்தியா, பூட்டான் ஆகிய இரு நாடுகளுடன் மட்டும் எல்லை சர்ச்சை நீடித்து வருகிறது. இந்தியாவுடனான 3,488 கி.மீ., பூட்டானுடனான 400 கி.மீ நீள எல்லைகள் இன்னும் வரையறுக்கப்படாதது, எல்லைப் பதற்றத்துக்கு முக்கியக் காரணமாக இருந்துவருகிறது. இந்த நிலையில், புதிய சட்டம் வேறு பல பிரச்னைகளை ஏற்படுத்தும் என்று அஞ்சப்படுகிறது.

ஏழு அத்தியாயங்களில் 62 ஷரத்துகளைக்கொண்டிருக்கும் இந்தச் சட்டம், “சீனாவின் இறையாண்மையும், அதன் பிரதேச ஒருமைப்பாடும் புனிதமானவை, அத்துமீற முடியாதவை” என்று கூறுகிறது. ஹபிரதேச ஒருமைப்பாடு மற்றும் நில எல்லையை உறுதியுடன் பாதுகாக்கவும், இறையாண்மைமிக்க எல்லைகளை பாதிக்கும் செயல்களைத் தடுக்கவும் அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும். சட்ட விரோதமாக எல்லையைக் கடப்பவர்கள் உடல் ரீதியாகத் தாக்குதலில் ஈடுபட்டாலோ, கைது செய்யப்படுவதைத் தடுத்தாலோ, சீன உடைமைகளுக்கும் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படும் வகையிலான வன்முறைச் செயல்களில் ஈடுபட்டாலோ, அவர்களுக்கு எதிராக ஆயுதங்களையும் கருவிகளையும் பயன்படுத்த, சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்படுகிறது’ என்று சீனாவின் புதிய சட்டம் கூறுகிறது.

இந்தியாவுடனான எல்லை மோதலுக்கு மத்தியில் தேசிய பாதுகாப்பு தொடர்பான நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காகவே இந்தச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது என்கிற கருத்தை சீன அரசின் ஆதரவு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில ஆண்டுகளாக, இந்தியாவை ஒட்டிய எல்லைப் பகுதியில் விமான தளங்கள், ஹெலிகொப்டர் இறங்கு தளங்கள், ரயில் பாதைகள், நெடுஞ்சாலைகள் எனப் புதிய கட்டமைப்புகளை சீனா அதிகரித்துவருகிறது. இந்த நிலையில், புதிய நகரங்களையும் கிராமங்களையும் உருவாக்கி வாழ்விடங்களை அதிகரித்தல், எல்லை வர்த்தகத்தை அதிகரிக்கும் வகையில் பொருளாதார மண்டலங்களை ஏற்படுத்துதல், பாதுகாப்புக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், போர் ஒத்திகை உள்ளிட்ட இராணுவப் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை நில எல்லைச் சட்டத்தின் துணைகொண்டு சீனா தீவிரப்படுத்தவிருக்கிறது.

எல்லைப் பகுதிகளில் பொதுமக்களைக் குடியமர்த்துவது தொடர்பாகவும் இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதன்படி, சீன அரசுடன் முரண்பாடுகளைக் கொண்டுள்ள உய்குர் போன்ற இனத்தவர்களையும் ஓய்வுபெற்ற இராணுவத்தினரையும் அதிக அளவில் எல்லைப் பகுதிகளில் குடியேற்ற சீனா திட்டமிட்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன.

சீனாவின் புதிய சட்டத்துக்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது. “இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பகுதி வரையறுக்கப்படாத நிலையில், அதற்குரிய வெளிப்படையான பரஸ்பர ஒப்புதலுடன்கூடிய தீர்வைக் காண்பது என இரு நாடுகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் புதிய சட்டத்தின் அடிப்படையில் சீனா நடவடிக்கை மேற்கொள்வது, இந்தியா - சீனா எல்லைப் பகுதியின் தற்போதைய நிலையை தன் இஷ்டத்துக்கு மாற்றுவதாக அமையும். எனவே, புதிய சட்டத்தின்படி நடவடிக்கை எடுப்பதை சீனா தவிர்க்க வேண்டும்” என்று இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்ஷி கூறியிருக்கிறார்.

சீன பாராளுமன்றத்தில் அக்டோபர் 23ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டம், 2022ஆம் ஆண்டு, ஜனவரி 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரவிருக்கிறது. ஏற்கெனவே, இரு நாடுகளுக்கு இடையே சமீபத்தில் நடந்த இராணுவரீதியிலான பேச்சுக்கள் தோல்வியடைந்த நிலையில், புதிய சட்டத்தை சீனா கொண்டுவந்திருப்பதால், இந்தியா-சீனா எல்லையில் பதற்றம் அதிகரிக்க நிறைய வாய்ப்பு உள்ளது.

‘எல்லைக்கோடுகள் அமைதியின் கரங்களால் வரையப்பட வேண்டும்’ என்கிற சீன ஞானி கன்பூசியஸின் கருத்துகளை சீனா புரிந்துகொள்ளுமா? ∎




**“ எல்லைப் பகுதிகளில் பொதுமக்களைக் குடியமர்த்துவது தொடர்பாகவும் இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி, சீன அரசுடன் முரண்பாடுகளைக் கொண்டுள்ள உய்குர் போன்ற இனத்தவர்களையும் ஓய்வுபெற்ற இராணுவத்தினரையும் அதிக அளவில் எல்லைப் பகுதிகளில் குடியேற்ற சீனா திட்டமிட்டிருப்பதாக செய்திகள் வருகின்றன.**



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II
நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

**1. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.**

கடும் மழை காரணமாக எங்கும் வெள்ளம், மரங்கள் சாய்ந்து விழுந்துள்ளன. வீதிகளிலும் வெள்ளம் பாய்வதால் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. சில வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள மக்கள் வெளியேறி பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். அவர்களுக்குச் சமைத்த உணவு வழங்கப்படுகின்றது.

- கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) **"அடைக்கலம்"** என்பதைக் குறிக்கும் சொல் எது? ..........................................................

(ii) **"வீதியிலும்"** என்பதன் பன்மைச் சொல்லை எழுதுக. ..................................................

(iii) உயர்திணைப் பெயர்ச்சொல்லை எழுதுக. ..........................................................................

(iv) **"கடும் மழை காரணமாக எங்கும் வெள்ளம்"** இவ் வாக்கியத்தில் உள்ள அடைமொழிச் சொல் எது?

..........................................................................................

(v) மக்கள் எங்கே தஞ்சம் புகுந்துள்ளனர்? ...........................................................................

(vi) இறந்தகால பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக. ....................................................

**2. பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

(i) இவர் ............................................. கவிபாடும் வல்லமை பெற்றிருந்தார்.
( இளமையிலேயே, இழமையிலேயே )

(ii) பளபளவென மின்னும் ............................................. ஒரு தனியழகுதான்.
( தங்கப்பேளை, தங்கப்பேழை )

**3. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( ✕ ) எனவும் அடைப்பினுள் இடுக.**

(i) "நீவிர்" என்பது முன்னிலைப் பன்மைப் பெயர்ச்சொல் ஆகும். ( )

(ii) "படிப்பான்" என்பது உயர்திணைப் பன்மை எதிர்காலச்சொல் ஆகும். ( )

(iii) "நீதிபதி" என்பது இருபால் பொதுப்பெயர் ஆகும். ( )

**4. கீழுள்ள தொடர்களுக்குரிய தனிச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து கோடிடுக.**

(i) கலைநிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி, பிழை பார்த்துத் திருத்தும் நிகழ்வு ......................... எனப்படும். ( ஒத்திகை / வெள்ளோட்டம் )

(ii) நமது முன்னோர் தமது அனுபவத்தின் மூலம் கண்டறிந்த உண்மைகளை மனத்தில் பதியும்படி சுருக்கமாக எடுத்துச் சொல்லும் தொடர் .................. ( பழங்கதை / பழமொழி )

**5. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

(i) விழாவிற்கான ஏற்பாடுகள் தடல்புடலாக நடைபெறுகின்றன. 'தடல்புடல்' என்பதன் கருத்து ............................................. ( விறுவிறுப்பாக, ஆறுதலாக ) என்பதாகும்.

(ii) பிரச்சினைகள் வரும்போது அவற்றிற்குத் தைரியமாக முகங்கொடுத்தல் வேண்டும். "முகங்கொடுத்தல்" என்பதன் கருத்து ...................................................................... ( எதிர்கொள்ளல், ஓடிவிடுதல் ) என்பதாகும்.

**6. (i) தரப்பட்ட பழமொழியைப் பூர்த்தி செய்க.**

கேட்காத .................................... பார்க்காத .................................... பாழ்

**(ii) வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை எழுதித் திருக்குறளைப் பூர்த்தி செய்க.**

உள்ளத்தால் .......................................................... உலகத்தார்

.......................................................................................... உளன்

**7. சரியான விடையினை எழுதுக.**

(i) அக்பர் சக்கரவர்த்தியின் முதன்மை மந்திரி யார்? ..........................................................

(ii) "சீயக்காய்" என்பதை எழுத்து வழக்கில் எழுதுக. ..........................................................

**8.** (i) "மாற்றான்" என்பதன் ஒத்த சொல் யாது? ..........................................................

(ii) "ஐக்கியம்" என்பதன் எதிர்ச்சொல் யாது? ..........................................................

**(iii) தரப்பட்ட வாக்கியத்தில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

எந்த எண் எனக்கும் ஒன்றும் புரியவில்லையே என்று சற்றுக் குழப்பத்துடன் கேட்டான்


**9. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) குதிரைகளைக் கட்டும் இடம் ................................ ( பட்டி, லாயம், தொழுவம் )

(ii) இளவேனில், முதுவேனில், வசந்தம் போன்றவை ............................................. ஆகும்.
( மாதங்கள், காலங்கள் )

**10. தரப்பட்ட உருக்களுக்கான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

(i)  ....................................

(ii)  ....................................

# சிறீலங்கா பொதுஜன முன்னணியின் தேவைக்கேற்ப இருக்கத் தயாரில்லை



## சு.கவின் தலைவர் மைத்திரி பதிலடி

கொழும்பு, நவ. 08

சிறீலங்கா பொதுஜன முன்னணியின் தேவைக்கேற்ப நாம் இருக்கத் தயாரில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றின் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

'தாம் கூறும்படி இருக்க வேண்டும் என்று சிறிலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறுகின்றனரே. அது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?" என்று குறித்த ஊடகம் கேள்வி எழுப்பியுள்ளது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி வேறு எவரேனும் கூறும் விதத்தில் இருக்கத் தயாராக இல்லை என்று மைத்திரிபால பதிலளித்துள்ளார்.

“நாம் சாதாரணமாக தாய், தந்தை கூறும்போது, அவற்றைக் கேட்டுக்கொண்டு இருந்துள்ளோம். அவர்கள் எமது சித்தப்பர்களா?” எனவும் சிறீலங்கா பொதுஜன முன்னணியிடம் மைத்திரிபால கேள்வி எழுப்பியுள்ளார். (இ)

# ஒய்வூதிய சம்பள கொடுப்பனவை கொள்ளையடிக்க அரசு சதித்திட்டம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 08

**நாட்டிலுள்ள அப்பாவி ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதிய சம்பளத்தை தன்னிச்சையாகக் கொள்ளையடிக்க அரசு முடிவு செய்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.**




ஓய்வூதியக்காரர்களின் பணத்தை அக்ரஹார காப்பீட்டில் வரவு வைக்கும் போர்வையில் கொள்ளையடிக்க அரசு தீர்மானித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சம்பளத் துண்டிப்பை மேற்கொள்வதற்கு ஓய்வூதிய சமூகம் இரண்டு வாரங்களுக்குள் விருப்பமா? இல்லையா? என்பதைக் குறிப்பிடத் தவறினால், அரசு அந்தப் பணத்தைக் குறைத்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“அரசு ஆட்சிக்கு வந்த வுடனே பணக்கார குபேரர்களுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் வரிச்சலுகையை வழங்கியது. இதனால் அரச வருவாயை முற்றிலுமாக இழந்த அரசு, இதன் இழப்பை ஈடுகட்ட முயல்வது இந்த நாட்டுக்காகத் தங்கள் கடின உழைப்பையும் அறிவையும் அர்ப்பணித்து நாட்டுக்குப் பல ஆண்டுகளாக சேவை செய்து, ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரஜைகளிடமிருந்துதான். இந்தக் கொடூர செயலுக்கு எதிராக நிபந்தனையின்றி நடவடிக்கை எடுப்போம்.

அக்ரஹார காப்பீட்டை வலுப்படுத்துவது என்ற போர்வையின் பெயரில் சூட்சுமமாக இந்த நாட்டிலுள்ள இலட்சக்கணக்கான ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

01.01.2016 இற்கு முன்னர் ஓய்வுபெற்ற 70 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் இருந்து 600 ரூபாயைக் குறைப்பதற்கும், 70 வயதுக்குட்பட்டவர்களிடம் இருந்து 400 ரூபாயைக் குறைப்பதற்கும் அரசு இவ்வருடம் ஒக்ரோபர் 29 ஆம் திகதி சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது" - என்றார். (இ)

# சீரற்ற காலநிலை: ஐவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 08

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட பல்வேறு அனர்த்தங்களில் சிக்கி இதுவரையில் 5 பேர் உயிரிழந்தனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு, பதுளை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் இந்த மரணங்கள் பதிவாகியுள்ளன. அத்துடன் தொடரும் மழை யுடன் கூடிய காலநிலையால், 12 மாவட்டங்களில் 1,143 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 391 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் புள்ளிவிபரத் தகவல்கள் தெரி விக்கின்றன.

இதேவேளை, நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது. பதுளை, இரத்தினபுரி, மாத்தளை, கேகாலை, கண்டி, குருநாகல் மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது எனவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# தலையில் வெட்டுக்காயங்களுடன் வீட்டிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, நவ. 08

தலையில் வெட்டுக்காயங்களுடன் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

குருநாகல், ஹெட்டிபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோன்வெள பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்தே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மடங்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயது நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று ஹெட்டிபொல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் வீட்டில் தனிமையில் வசித்து வந்தவர் என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். பிரேத பரிசோதனைக்காக குளியாப்பிட்டி வைத்திய சாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் ஹெட்டிபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதில் தொடரும் சிக்கல்

கொழும்பு, நவ. 08

நாட்டில் நிலவும் டொலர் பிரச்னை காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ஒரே தடவையில் அதிகமான அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வது சிக்கலை ஏற்படுத்தும் எனவும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரிசி மீதான இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ள போதிலும் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரையான மெட்ரிக் தொன் அரிசியை மட்டுமே இறக்குமதி செய்ய முடியும் எனவும் அந்தச் சங்கம் கூறியுள்ளது.

டொலர் பிரச்னையும் அரிசி இறக்குமதிக்குத் தடை யாக உள்ளது எனவும் அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார். (இ)

# 3,000 ஏக்கர் காணி சுவீகரிப்புக்கு எதிராக கொழும்பு பேராயர் நீதிமன்றத்தில் மனு!



கொழும்பு, நவ. 08

3 ஆயிரம் ஏக்கர் காணியைச் சுவீகரிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை எடுத்த தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு கோரி கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் எழுத்தாணை மனுத் தாக்கல் செய்துள்ளார்.

முத்துராஜவலை ஈர வலயத்திலுள்ள காணிகளை நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொண்டு வந்து ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட வர்த்தமானியை வலுவிழக்கச் செய்து எழுத்தாணை பிறப்பிக்குமாறு இந்த மனுவில் கொழும்பு பேராயர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நீர்கொழும்பு, வத்தளை மற்றும் ஜா - எல பிரதேசங்களில் இவ்வாறு காணிகள் சுவீகரிக்கப்படுவதால் அப்பகுதியில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படுவதோடு, அவர்களின் குடியிருப்பும் கடும் சவாலுக்கு உள்ளாகும் என கர்தினால் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த மனுவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவ, சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர், வத்தளை, நீர்கொழும்பு மற்றும் ஜா - எல பிரதேச செயலாளர்கள் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (இ)




# ஓடும் ரயிலில் கத்திக்குத்து; ஜேர்மனியில் மூவர் காயம்!

பெர்லின், நவ. 08

தெற்கு ஜேர்மனியில் அதிவிரைவு ரயிலில் இடம் பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் 3 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பவேரியாவில் உள்ள ரெஜென்ஸ்பர்க் மற்றும் நியூரம் பெர்க் நகரங்களுக்கு இடையே பயணித்த ரயிலில் இந்தத் தாக் குதல் நடத்தப்பட்டது. தாக்குதல் இடம்பெற்ற சிறிது நேரத்திலேயே தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் 27 வயது சிரிய நபரை பொலிஸார் கைது செய்தனர்.

ஜேர்மனிய நேரப்படி நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலுக்கான நோக் கம் என்னவென்பது தெரிய வில்லை என பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த எவரும் உயிருக்கு ஆபத்தான நிலையில் இல்லை எனப் பொலி ஸார் கூறினர்.

இதேவேளை, கத்தியால் குத்திய நபர் கடந்த 2014 இல் ஜேர்மனிக்குள் நுழைந்து பின்னர் அகதி அந்தஸ்து பெற்ற வராவார். உளவியல் பிரச் னைகளால் அவர் பாதிக்கப் பட்டவர் என ஜேர்மனிய ஊட கங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

# சீனாவின் தலைவராக ஜின் பிங் தொடர்வாரா?

## தீர்மானிக்கும் கூட்டம் இன்று


பீஜிங், நவ. 08

சீனாவின் தலைவராக உள்ள ஜி ஜின்பிங் மூன்றாவது முறை யாகவும் பதவியில் தொடர் வதை உறுதி செய்வதற்காக சீன கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டம் இன்று திங்கட்கிழமை தலை நகர் பீஜிங்கில் தொடங்குகிறது.

ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி யின் பொது செயலர், மத்திய இராணுவ குழுவின் தலைவர், ஜனாதிபதி என மூன்று பதவி களும் தற்போது ஜி ஜின்பிங் வசமே உள்ளது. சீன முன்னாள் அதிபர் மாவோ ஜெடாங்குக் குப் பின் பலமான தலைவராக ஜி ஜின்பிங் உள்ளார்.

சீன சட்டங்களின்படி இரு ஐந்தாண்டுகள் அல்லது 68 வயது வரை மட்டுமே ஒருவர் ஜனாதிபதியாக இருக்க முடி யும். அடுத்தாண்டு இறுதியில் தன் இரண்டாவது ஐந்தாண்டு களை ஜின்பிங் நிறைவு செய் கிறார். சீன ஜனாதிபதி பதவிக் கான இந்தக் காலக்கெடுவை நீக்கி 2018இல் சட்டம் நிறை வேற்றப்பட்டது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு பீஜிங்கில் இன்று முதல்



- 11ஆம் திகதி வரை நடக்க வுள்ளது. இதில், மூன்றாவது முறையாக ஜனாதிபதியாக ஜின் பிங் தொடர்வதற்கான தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது. (ஐ)

# இந்திய மருத்துவமனையில் தீ; 11 நோயாளர்கள் உயிரிழப்பு!

மும்பை, நவ. 08

மகாராஷ்டிராவின் அஹ்மத் நகரில் உள்ள அரச மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் சனிக்கிழமையன்று ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது 11 பேர் உயிரிழந்தனர்.

மேலும், மூன்று முதல் நான்கு பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மருத்துவமனையின் கோவிட்-19 சிகிச்சை பிரிவில் தீ விபத்து ஏற்பட்டது. சம்பவத்தின்போது குறித்த பிரிவில் 17 நோயாளிகள் சிகிச்சை பெற்று வந்திருந்தனர்.

ஏனைய நோயாளிகள் மற்றொரு மருத்துவமனையில் உள்ள கோவிட் சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று மாவட்ட ஆட்சியர் ராஜேந்திர போஸ்லே செய்தியாளர்களிடம் கூறினார். (ஐ)



# சீன உளவாளியை குற்றவாளியாக அறிவித்தது அமெரிக்கா

வாஷிங்டன், நவ. 08

அமெரிக்க இராணுவ நிறுவ னங்களின் இரகசியங்களை திருட சதி செய்தார் என்ற குற் றச்சாட்டில் கைதான சீன உள வுத்துறை அதிகாரி சூ யான் ஜூன் என்பவரை குற்றவாளி யாக அறிவித்துள்ளது அமெ ரிக்க நீதிமன்றம்.

சூ யான்ஜூன் கடந்த 2018ஆம் ஆண்டு பெல்ஜி யத்தில் கைது செய்யப்பட்டு அமெரிக்காவுக்கு நாடு கடத்தப் பட்டார். அங்கு நடந்த வழக்கு விசா ரணையில் இவர் குற்ற வாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள் ளார். இவருக்கு 60 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட லாம்என்று தெரியவருகின்றது.(ஐ)

# ஈராக் பிரதமரை குறிவைத்து 'ட்ரோன்' மூலம் தாக்குதல்!

பாக்தாத், நவ. 08

ஈராக் பிரதமர் முஸ்தபா அல்-காதிமியை கொல்லும் நோக்கத்தில் அவரின் வீட்டை குறிவைத்து நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை ட்ரோன் தாக் குதல் நடத்தப்பட்டது. இதில், அவர் எந்தக் காயமுமின்றி உயிர் தப்பினார். எனினும், அவ ரின் பாதுகாப்பு பிரிவை சேர்ந்த 6 பேர் படுகாயங்களுக்கு இலக் காகி உள்ளனர்.

தலைநகர் பாக்தாத்தில் இடம்பெற்ற இந்தத் தாக்குத வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட ட்ரோன் மூலம் குறி வைத்து நடத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாக்குதலை அடுத்து பிரத மர் அல்-காதிமி மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப் பட்டாரென ஊடக அறிக்கை கள் தெரிவித்தன.

எனினும் காயங்கள் ஏது மின்றி இந்தத் தாக்குதலில் தான் அதிஷ்டவசமாகத் தப்பினார்



என்று பிரதமர் முஸ்தபா அல்-காதிமி தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

“ஈராக் நலனுக்காக அனை வரும் அமைதியாகவும், நிதான மாகவும் இருக்க வேண்டும்”, என அவர் அழைப்பு விடுத்துள் ளார்.

நகரின் பல அரச கட்டடங் கள் மற்றும் வெளிநாட்டு தூதர கங்கள் உள்ள பகுதியில் நேற்று காலை நடந்தப்பட்ட தாக்கு தலுக்கு இதுவரை யாரும் பொறுப்பேற்கவில்லை.

முன்னாள் உளவுத்துறைத் தலைவராக இருந்த அல்-காதிமி கடந்த ஆண்டு மே மாதம் ஈராக் பிரதமராகப் பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆபிரிக்க நாடான சியாரா லியோனில்

# எரிபொருள் தாங்கி வெடித்ததில் 98 பேர் பலி; 100 பேர் வரை காயம்

ப்ரீரவுன், நவ. 08

மேற்கு ஆபிரிக்க நாடான சியரா லியோனின் தலைநகரில் எரிபொருளை ஏற்றி சென்ற வாகனம் விபத்தில் சிக்கி வெடித்து சிதறியதில் 98 பலி யாகினர். நூற்றுக்கும் மேற்பட் டவர்கள் காயமடைந்தனர்.

வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இந்தக் கோர விபத்தில் இறந்தவர்களின் எண்ணிக் கையை அரசாங்கம் இன்னும் உறுதிப்படுத்தவில்லை. ஆனால், வெடிப்பைத் தொடர்ந்து 91 சடலங்கள் ப்ரீரவுனில் உள்ள அரச வைத் தியசாலை பிரேத அறைக்கு கொண்டுவரப்பட்டன என்று வைத்தியசாலை தகவல்கள் உறுதி செய்துள்ளன.

தலைநகரில் உள்ள மருத்து வமனைகளில் காயமடைந்த



100 பேர் சிகிச்சைக்காக சேர்க் கப்பட்டுள்ளனர் என சியரா லியோன் துணை சுகாதார அமைச்சர் அமர ஜம்பாய் ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

விபத்தில் சிக்கிய பவுசரி லிருந்து எரிபொருளை சேகரிக்க திரண்டவர்களே அதிகளவில் உயிரிழந்தனர் மற்றும் காயமடைந்தனர் என்று துறைமுக நகரத்தின் மேயர் இவோன் அகி-சாயர் கூறியுள்ளார். (ஐ)

# இசை நிகழ்வில் நெரிசல்; அமெரிக்காவில் 8 பேர் பலி!

நியூயோர்க், நவ. 08

அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணம் - ஹூஸ்டன் நகரில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற அஸ்ட்ரோவோர்ல்ட் இசைக் கச்சேரியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி குறைந்தது எட்டு பேர் உயிரிழந்தனர்.

சுமார் 50,000 பேர் பங்கேற்ற இந்த நிகழ்வில், இசைக் கச்சேரி நடந்துகொண்டிருந்தபோது ஒரு கட்டத்தில் அதிகளவானவர்கள் மேடையை நோக்கி நகரத் தொடங்கினர். இதனால் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் எட்டு பேர் உயிரிழந்துதனர் பலர் காயமடைந்தனர் என்று தெரிய வருகின்றது. உயிரிழந்த 8 பேரின் பிரேத பரிசோதனை அறிக்கைகள் வெளி யாகும் வரை மரணத்துக்கான காரணத்தை உறுதிசெய்ய முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இச்சம்பவம் குறித்து காணொலிகளை அடிப்படையாகக் கொண்டு வைத்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கூட்ட நெரிசலில் சிக்கிய 17 பேரை தீயணைப்புத் துறையினர் மீட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அவர்களில் 11 பேர் மாரடைப்பு நிலையில் இருந்தனர் எனவும் ஹூஸ்டன் தீயணைப்புத் துறைத் தலைவர் சாமுவேல் பெனா தெரிவித்தார். (ஐ)



# பொலிஸார்மீது மீண்டும் தாக்குதல் 2 அதிகாரிகள் வைத்தியசாலையில்

## 6 பெண்கள் உட்பட 9 பேர் கைது

அநுராதபுரம், நவ. 08

**அநுராதபுரம் - கஹட்டகஸ்திகிலி பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருள் தொடர்பில் சோதனைக்குச் சென்ற பொலிஸ் அதிகாரிகள்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**



தாக்குதலுக்குள்ளான இரண்டு பொலிஸ் அதிகாரிகள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பொலிஸ் அதிகாரிகளைத் தாக்கிய குற்றச்சாட்டில் 6 பெண்கள் உட்பட 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் பிரதேச போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் மற்றும் கான்ஸ்டபிள் ஆகியோரே தாக்குதலில் படுகாயமடைந்துள்ளனர்.

ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்ய முற்பட்டபோது, குழுவொன்று பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தியது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ)

## 468 பேர் சிக்கினர்

கொழும்பு, நவ. 08

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கட்ட விசேட சுற்றி வளைப்பில், பிடியாணை பிறப் பிக்கப்பட்டிருந்த 468 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்துக்குப் பொறுப் பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின் பேரில், இந்தச் சுற்றிவளைப்பு நேற்றுமுன் தினம் காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை முன்னெ டுக்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர் புடைய 70 பேரும், இலஞ்ச - ஊழல் குற்றங்களுடன் தொடர் புடைய 593 பேரும், ஏனைய குற் றச்செயல்களுடன் தொடர் புடைய 1,019 பேரும் கைது செய் யப்பட்டனர் எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (இ)

# நகரங்களுக்கிடையிலான கடுகதி ரயில் சேவைகள்

## இன்று முதல் மீள ஆரம்பம்

கொழும்பு, நவ. 08

நகரங்களுக்கு இடையிலான கடுகதி ரயில் சேவைகள் இன்று முதல் மீள ஆரம்பிக்கப்படும் என்று ரயில் திணைக்களம் தெரி வித்துள்ளது.

மாகாணங்களுக்கு இடை யிலான பயணத்தடை நீக்கப் பட்டதை அடுத்து கடந்த முத லாம் திகதி முதல் மாகாணங் களுக்கு இடையிலான அலுவ லக ரயில் சேவை ஆரம்பிக்கப் பட்டது. எவ்வாறிருப்பினும், இரவு 7 மணியின் பின்னர் தூர மற்றும் குறுந்தூர ரயில் சேவை கள் என்பன வழமை போன்று இடம்பெறுவதில்லை.

தற்போது நடைமுறையில் உள்ள முறைமைக்கு அமைய இரவு 7 மணியின் பின்னர் ப யணிகளின் அவசியத்தன்மை கருதி மாத்திரம் ரயில் சேவை கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.



தற்போது 180 முதல் 200 ரயில் சேவைகளை முன்னெ டுக்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது என ரயில் திணைக் களத்தின் பொது முகாமை யாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"காங்கேசன்துறை வரை இடம்பெறும் நகரங்களுக்கு இடையிலான கடுகதி ரயில் சேவையை மீண்டும் இன்று முதல் முன்னெடுக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு முதல் கண்டி வரையில் சேவை யில் ஈடுபடும் நகரங்களுக்கு இடையிலான கடுகதி ரயில் சேவையும் இன்று முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.

வழித்தடத்தில் ஏற்பட்டுள்ள தடைகள் மற்றும் மண்சரிவு காரணமாக பதுளைக்கான ரயில் சேவை தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளது. நிலைமை சீரானதன் பின்னர், அந்த ரயில் சேவையும் மீள ஆரம்பிக்கப் படும்.

யாழ். தேவி ரயில் தற்போது யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபடுகின்றது.

ஏனைய ரயில்களையும் சேவையில் ஈடுபடுத்த எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக் கப்படும்.

அதேநேரம், அடுத்த கலந்துரையாடல்களில், இரவு நேர அஞ்சல் ரயில் சேவைகளை யும் ஆரம்பிக்க எதிர்பார்த்துள் ளோம்" - என்றார். (இ)

# இரு வேறு விபத்துக்களில் இருவர் பரிதாப உயிரிழப்பு

கொழும்பு, நவ. 08

இரு வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் இருவர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இதற்கமைவாக கொழும்பு, பேலியகொடை பியகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேலியாகொடை பிரதேசத்தில், பியகம நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, பாதசாரி ஒருவர் மீது மோதிய தில் பாதசாரி மரணமடைந் தார்.

பம்பலப்பிட்டி பிரதேசத் தைச் சேர்ந்த 44 வயது நபரே உயிரிழந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த பாதசாரியை கிரிபத்கொட வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் அவர் மரண மடைந்துள்ளார்.

விபத்துடன் தொடர்பு டைய மோட்டார் சைக்கிள் செலுத்துநரை கைதுசெய்துள்ள பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

இதேவேளை, அநுராதபுரம் கவரக்குளம் வீதியில், லொறி யொன்றும் சிறிய ரக லொறி யொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், சிறிய ரக லொறியின் சாரதி மரணமடைந்தார்.

அநுராதபுரம் மஹபலாடி குளம் பிரதேசத்தை சேர்ந்த 29 வயது நபரே உயிரிழந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த சிறிய ரக லொறியின் சாரதி அநுராதபுரம் வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

விபத்துடன் தொடர் புடைய லொறியின் சாரதியைக் கைதுசெய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ)

# மின்சாரம் தாக்கி மாணவன் மரணம்

பதுளை, நவ. 08

ரவுட்டருக்கு மின்னிணைப்பை ஏற்படுத்த முயன்ற பாடசாலை மாண வன் ஒருவர் மின்சாரம் தாக்கி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

பதுளை, லுனுகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலகொல்ல பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என லுனுகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அலகொலகல, லுனுகல பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயது மாண வனே இவ்வாறு மரணமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவன், லுனுகல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் உயிரிழந்தார்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் லுனுகலை வைத்தியசாயின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் லுனுகல பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# விபத்தில் காயமடைந்த வயோதிபர் உயிரிழப்பு

தென்மராட்சி, நவ. 8

வீதியைக் கடக்க முற்பட்ட வயோதிபரை மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தைச் சேர்ந்த க.லோகநாதன் (வயது - 65) என்பவரே உயிரிழந்தார்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள வீதியில், வர்த்தக நிலையத்துக்குச் சென்றுவிட்டு வீதியைக் கடக்க முற்பட்டபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் வயோதிபரை மோதியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்தில் படுகாயமடைந்த வயோதிபர் மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதி யான இளைஞர் இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மேலதிக சிகிச்சைக் காக யாழ்ப்பா ணம் போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்ட வயோதிபர் அங்கு உயிரி ழந்துள்ளார். (இ)



# மாரடைப்பால் சாரதி மரணம்

யாழ்ப்பாணம், நவ. 08

மருத்துவமனைக்குச் சிகிச் சைக்காக வந்தோரை ஏற்றி வந்த ஹைஏஸ் வாகனச் சாரதிக்கு இடைநடுவில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.

மாரடைப்பு ஏற்பட்டதும் வாகனத்தை வீதியில் நிறுத்தி யதால் பயணிகள் பாதிப்பின்றி தப்பித்தனர்.

இந்தச் சம்பவம் சங்குப்பிட் டிப் பாலத்துக்கு அண்மையாக கேரதீவுப் பகுதியில் இடம்பெற் றது.

வவுனியா வீரபுரத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அன்ரன் ஜெயராஜ் (வயது - 61) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். (இ - 03)

# ஹைஏஸ் வாகனத்தில் இளம் பெண் கடத்தல்

யாழ்ப்பாணம், நவ. 08

ஹைஏஸ் வாகனத்தில் வந்தவர்களால் இளம் பெண் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை மருத்துவமனையில் பணிபுரியும் இளம் பெண் தனது சகோதரனது மோட்டார் சைக்கிளில் மருத்துவமனைக்கு சென்றுகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் சகோதரன் மீது இனந்தெரி யாத குழுவினர் தாக்குதல் நடத்திவிட்டு இளம் பெண்ணைக் கடத்திச் சென்றனர் என்று முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (இ - 03)

# தவறுகளை உடன் திருத்துங்கள் இல்லையேல் ஆட்சிதான் கவிழும்

## அரசுக்கு சிரேஷ்ட உறுப்பினர்கள் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 08

**“அரசின் இயலாமை வெளிப்பட்டு மக்கள் மத்தியில் நம்பிக்கை இல்லாது போயுள்ளது. இதனால் ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூறுவதை மக்கள் நம்புவதில்லை. இந்த நிலைமை எதிர்வரும் தேர்தல்களில் பாரியளவில் தாக்கம் செலுத்தும். எனவே, தவறுகளை அவசரமாகத் திருத்திக்கொண்டு மக்கள் மயப்பட்ட ஆட்சியை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மாற்று அரசியல் சக்தி ஆட்சிப்பீடம் ஏறுவதைத் தவிர்க்க இயலாது.”**

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர்.

“நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மக்களின் வாழ்வதார பிரச்னைகளை கையாள்வதில் அரசு தோல்விக்கண்டுள்ளது. கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றமே இதற்குக் காரணம்” என்று ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான அநுரபிரிய தர்ஷன யாப்பா மற்றும் சுசில் பிரேமஜயந்த உள்ளிட்டவர்கள் விமர்சித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

“நாட்டில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. தற்போதைய அரசின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த பொதுமக்கள் இன்று வெறுப்புடன் உள்ளனர்.

கொரோனாத் தொற்றால் இலங்கை மாத்திரமல்ல முழு உலக நாடுகளும் பாதிப்படைந்துள்ளன. ஆனால், அந்த நாடுகள் பொருளாதார ரீதியில் மீள எழுவதற்காக மக்கள் மயப்பட்ட திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. ஆனால், இலங்கை அவ்வாறில்லை. அநாவசியமான செயல்பாடுகளில் ஆர்வம் காட்டி வருகின்றது.

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு உதவும் வகையில் எவ்விதமான திட்டங்களையோ - நம்பிக்கைகளையோ அரசு ஏற்படுத்தவில்லை.

இதனால் அரசு மீது மக்கள் முழு அளவில் நம்பிக்கை இழந்து வருகின்றனர். எனவே, அரசு நிலைமையை உணர வேண்டும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதிலும் அந்தப் பொருட்களைத் தட்டுப்பாடின்றி மக்களுக்கு வழங்குவதிலும் அரசு தோல்வி கண்டுள்ளது.

நாளுக்கு நாள் நிலைமை மோசமடைகின்றது. ஆனால், அரசு அந்நிய நாடுகளுக்குத் தேவையான விடயங்களை நாட்டில் முன்னெடுப்பதற்கான சூழலையே ஏற்படுத்துகின்றது.



தற்போதைய அமைச்சரவை முழு அளவில் தோல்வி கண்டுள்ளது. மிகவும் மோசமான நிலைமையிலேயே உள்ளோம். இதனால் ஆட்சியை முன்னெடுப்பதே நெருக்கடியாக உள்ளது.

தீர்மானங்கள் எடுக்கும் நிலைமையில் நாம் இல்லை. எனவே, தற்போது பொறுப்புகள் வழங்கப்பட்டாலும் அதனை ஏற்கப்போவதில்லை.

மிகவும் கவலையுடன் மௌனித்துள்ளோம். ஆசியாவின் வறுமையான நாடு என்ற நிலைக்கு இலங்கை தள்ளப்படலாம். அரிசி தொடக்கம் எரிவாயு வரை அனைத்திலும் விலையேற்றமும் தட்டுப்பாடுமே உள்ளது. மறுபுறம் உரம் இல்லாது விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அரசின் இயலாமை வெளிப்பட்டு மக்கள் மத்தியில் நம்பிக்கை இல்லாது போயுள்ளது” - என்றனர். (இ)

# அரச சேவை பட்டதாரிகள் இன்று நாடு முழுவதும் வேலைநிறுத்தம்

கொழும்பு, நவ. 08

மத்திய மற்றும் மாகாண அரச சேவையில் பட்டதாரி அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 4 கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதும் இன்று திங்கட்கிழமை சுகவீன விடுப்புடன் கூடிய ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

இதற்கு வடக்கு மாகாண அரச சேவை பட்டதாரி உத்தியோகத்தர்கள் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“சம்பள முரண்பாடுகளை நீக்குதல், பொருத்தமான பதவியுயர்வு நடைமுறைகளை வழங்குதல், திறமை மற்றும் தராதரத்துக்கு ஏற்றவாறு கடமைகளை வழங்குதல், அனைத்து பட்டதாரி பயிலுநர் அலுவலர்களுக்கும் உடனடி நிரந்தர நியமனம் வழங்குதல் போன்ற கோரிக்கைளை முன்வைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை சங்கம் மற்றும் பணிக்கு அமர்த்தப்பட்ட பட்டதாரிகள் சங்கம் ஆகியவற்றால் இன்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்படும் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு நாமும் ஆதரவு வழங்குகின்றோம்.

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இன்று ஒன்றுபட்டு சுகவீன விடுப்புடன் கூடிய ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்துக்கு பேராதரவை வழங்க வேண்டும்” - என்றுள்ளது. (இ)

# பொருளாதார மத்திய மையங்களில் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 08

நாட்டில் உரம் மற்றும் விவசாய இரசாயனங்களுக்கான தட்டுப்பாட்டுக்கு மத்தியில், பொருளாதார மத்திய நிலையங்களில் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

பொருளாதார மையங்களுக்குக் கிடைக்கப்பெறும் மரக்கறிகளின் தொகை குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைந்துள்ளமை காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

உரம் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக, விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதிலிருந்து விலகி இருப்பதால், பொருளாதார மத்திய நிலையங்களுக்குக் கிடைக்கும் மரக்கறிகளின் தொகை குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைந்துள்ளது எனத் தம்புள்ளை மற்றும் கெப்பட்டிபொல பொருளாதார மத்திய நிலையங்களின் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

### சப்புகஸ்கந்தை பயணப் பை சடலம்:

# கைதுசெய்யப்பட்ட இருவரும் 48 மணிநேர தடுப்புக்காவலில்

கொழும்பு, நவ. 08

சப்புகஸ்கந்தையில் பயணப் பையொன்றில் பெண்ணொருவர் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில், கைதுசெய்யப்பட்ட மட்டக்குளி - சமித்திபுர பகுதியைச் சேர்ந்த தம்பதியரை, 48 மணிநேர தடுப்பில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த இருவரும் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

இந்நிலையில், நேற்று மஹர நீதிவான் நீதிமன்றத்தில் அவர்கள் முன்னிலைப் படுத்தப்பட்டபோது, நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (இ)




# டீ. ஏ. ராஜபக்ஷவின் 54ஆவது நினைவு தினம்



கொழும்பு, நவ. 08

அமரர் டீ. ஏ. ராஜபக்ஷவின் 54ஆவது நினைவு தினம், தங்காலை மஹவெல வீதியில் அமைந்துள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு அருகில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

இதன்போது புவக்தண்டாவ மகளிர் வித்தியாலயத்தின் மாணவிகள் டீ. ஏ. ராஜபக்ஷ நினைவு கீதத்தை இசைத்தனர்.

அதைத் தொடர்ந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, அமைச்சர்களான நாமல் ராஜபக்ச, எஸ்.எம்.சந்திரசேன, இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, டீ. வீ. சானக, ஜானக வக்கும்புர, தேனுக விதானகமகே, தென் மாகாண ஆளுநர் விலீ கமகே ஆகியோர் டீ. ஏ. ராஜபக்சவின் உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

டீ.ஏ.ராஜபக்ஷ நினைவு தினக் குழுவின் சார்பில் தென் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கபில திஸாநாயக்க மற்றும் பிரதான பிரதி செயலாளர் உபுல் திஸநாயக்க மற்றும் தென் மாகாண சபையின் தவிசாளர் சோமவங்ஷ கோதாகொட ஆகியோர் டீ. ஏ. ராஜபக்ஷவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்தனர்.

தங்காலை வகேகொட புராதன வஜிரகிரிய விகாராதிபதி மிரிஸ்ஸே தம்மவங்ஷ தேரர் இதன்போது அனுசாசனம் நிகழ்த்தினார்.

நிகழ்வில் மஹாசங்கத்தினரும் கலந்துகொண்டனர்.

வீரகெடிய மெதமுலனவிலுள்ள டீ.ஏ.ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியார் தோன தந்தினா சிமரசிங்க திஸநாயக்க ஆகியோரினது நினைவிடத்துக்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் விஜயம் செய்த ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் அங்கு விளக்கேற்றி பெற்றோரை நினைவுகூர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# வரவு - செலவு திட்டத்தில் நிவாரணம் கிடைக்காது!



## இராஜாங்க அமைச்சர் தயாசிறி

குருநாகல், நவ. 08

**2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்தில் பெரிய எதிர்பார்ப்புகள் இல்லை என்று தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியுமென எதிர்பார்க்கிறார் என்றும் கூறினார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் குருநாகல் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். “ இந்த வரவு- செலவுத் திட்டத்தில் பெரும் நிவாரணத்தை எதிர்பார்க்க முடியாது” என்றார்.

வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாக நிவாரணம் வழங்கப்படும் என்பது ஏமாற்று நடவடிக்கையாகும். அதனூடாக எந்தவொரு நிவாரணத்தையும் எதிர்பார்க்கமுடியாது.

வரவு - செலவுத் திட்டம் என்பது நத்தார் தினத்தன்று வரும் நத்தார் தாத்தா வழங்கும் பரிசு மாதிரியானது என மக்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். அது முற்றிலும் தவறானதாகும். மக்களின் அவ்வாறான தவறான சிந்தனை களால்தான், நாடு இவ்வளவு மோசமான நிலைமையை எதிர்நோக்கியுள்ளது - என்றார்.

(ஐ)

# பெருமுதலீடுகளை இலங்கையில் செய்வதற்கு இங்கிலாந்து தயார்!

## அமைச்சர் ஜீ. எல். பீரிஸ்

கொழும்பு, நவ. 08

ஆளும் தரப்பிலுள்ள கட்சிகளுக்கிடையில் சில கருத்து முரண்பாடுகள் ஏற்படக்கூடும். எனினும் அரசாங்கம் என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து எடுக்கும் தீர்மானங்களுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கடந்த வாரம் முன்னெடுத்த விஜயத்தின் பலனாக இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு பெரும் முதலீடுகள் கிடைக்கப் பெறவுள்ளன என்ற வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீட மகாநாயக்க தேரர்களை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே இதனைத் தெரிவித்தார்.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர், மல்வத்து பீடத்தின் மகாநாயக்க திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர், மெதகம தம்மானந்த தேரர், நாரம்பனாவே ஆனந்த தேரரை ஆகியோரை சந்தித்து அமைச்சர் ஆசி பெற்றுக் கொண்டார்.

அமைச்சருடனான சந்திப்பின் போது அஸ்கிரிய பீடத்தின் பிரதி பதிவாளர் நாரம்பனாவே ஆனந்த தேரர் கருத்து வெளியிடுகையில், “எதிர்வரும் 3 ஆண்டுகளுக்குள் தற்போது இடம்பெற்றுள்ள தவறுகளை திருத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

தற்போது ஏற்பட்டுள்ளது தொற்று நிலைமை என்பதை தெரிந்து கொள்ளாத சிலரும் , இந்த தொற்று நிலைமை உலகலாவிய ரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அறிந்திருந்தும் எதிர்க்கட்சியினரும் இணைந்து விமர்சனங்களை முன்வைக்கின்றனர். எனவே, இணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலைமையே தற்போது காணப்படுகிறது. இந்த நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு பொருத்தமான வேலைத்திட்டத்தை திட்டமிட்டு முன்னெடுக்க வேண்டும்.“ என்றார்.

மெதகம தம்மானந்த தேரர் தெரிவிக்கையில் , “சேதன உரப்பாவனையை


Prof. GL Peiris

ஊக்குவிப்பதற்கு ஜனாதிபதி எடுத்துள்ள தீர்மானம் சிறந்ததாகும். எனினும், சிலர் இதனை தோல்வியடைச் செய்ய முயற்சிக்கின்றனர். விவசாயிகள் ஊடாக முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுபவை என்று தெளிவாகத் தெரிகிறது.

எனவே, சேதன உரதிட்டம் தொடர்பில் விவசாயிகளுக்கு தெளிவுபடுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.“ என்றார். சந்திப்புக்களின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் , “ஆளும் தரப்பிலுள்ள கட்சிகளுக்கிடையில் சில கருத்து முரண்பாடுகள் ஏற்படக் கூடும்.

எனினும், அரசாங்கம் என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து எடுக்கும் தீர்மானங்களுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கடந்த வாரம் முன்னெடுத்த விஜயத்தின் பலனாக இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு பாரிய முதலீடுகள் கிடைக்கப் பெறவுள்ளன. நல்லாட்சி அரசாங்கத்தினால் மாற்றப்பட்ட தேர்தல் முறைமைகள் எம்மார் சீரான முறையில் சரி செய்யப்படும். அத்தோடு புதிய அரசியலமைப்பும் உருவாக்கப்படும்.“ என்றார்.

### பயணத் தடை...

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் கூறியதாவது:-

“இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக நாளாந்தம் 500 தொடக்கம் 600 வரையான கொரோனா தொற்றாளர்களே அடையாளம் காணப்பட்டு வந்த நிலையில், கடந்த மூன்று நாட்களாக அந்த எண்ணிக்கை 600 ஐக் கடந்துள்ளது.

பயணக் கட்டுப்பாட்டை தளர்த்திய பின்னர் மக்கள் பொறுப்பற்ற வகையில் நடந்துகொள்கின்றனர். இதனால் தொற்று நிலைமை மீண்டும் அதிகரிக்கும் நிலைமை உருவாகியுள்ளது” - என்றார். (இ)

### வடக்கை...

மாலை முதல் மறு அறிவித்தல் வரை தென்கிழக்கு வங்கக் கடலில் மீன்பிடி மற்றும் கடற்படை நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு மீனவர்கள் மற்றும் கடற்படைக்கு வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. (ஐ)

### நான்காவது...

நான்காவது அலையை எதிர்கொள்ள உலகம் தயாராகி வருகின்றது. உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காதுவிடின் நான்காவது அலையிலிருந்து இலங்கை தப்பிக்க முடியாது.

அநுராதபுரம் மாவட்டத்தில் ஏற்கனவே தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நாட்டை கொரோனா தொற்று தாக்காதது போன்று பொதுமக்கள் நடந்து கொள்கின்றனர்.

டிசெம்பரில் நான்காவது தொற்றுக்கு உலகம் தயாராகிறது. இலங்கையும் பாதிக்கப்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. எனவே பொதுமக்கள் முகக்கவசம் அணிவதுடன் சுகாதார விதிகளையும் பின்பற்ற வேண்டும் - என்றார். (ஐ)

### இன்று முதல்...

பஸில் ராஜபக்ஷ 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை முன்வைப்பார்.

மேலும், 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட விவாதத்தை செவிப்புலனற்ற நபர்களுக்காக சைகை மொழியிலும் வழங்குவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து சபாநாயகரின் ஆலோசனைக்கு அமைய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு இவ்விடயத்தைக் கவனத்தில் எடுத்துக் கொண்டதுடன், இதற்கமைய வரவு - செலவுத் திட்ட விவாதம் நடைபெறும் காலப்பகுதியில் நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு சமாந்தரமாக சைகை மொழிக்குத் தனியானதொரு கட்டமொன்றை வழங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

### ‘ஒரே நாடு ஒரே...

ளது.

இது தொடர்பில் நேற்று அந்தக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

எந்தவொரு புதிய சட்டமும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டும். இதன் பின்னர் நீதி அமைச்சின் - சட்டமா அதிபரின் உதவியுடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாட தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும்.

செயலணி ஒன்றை அமைத்து, அமைச்சரவையில் விவாதிக்காமல், நீதி அமைச்சர், சட்ட மா அதிபரின் அதிகார வரம்பில் இருந்து நடவடிக்கை வேடிக்கைக் குரியது. அத்துடன், ஜனாதிபதியின் செயல் அரசமைப்புக்கு முரணானது.

எனவே, நாட்டின் ஒற்றுமைக்கு பாதகமான ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஜனாதிபதி செயலணியை உடனடியாக இல்லாது ஒழிக்க வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கோருகிறோம் - என்றுள்ளது. (ஐ)

### அத்தியாவசிய...

என்று அத்தியாவசிய பொருட்கள் மற்றும் திரவ இறக்குமதியாளர் சங்கத்தின் ஊடாக பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசிய பொருட்களை விடுவிப்பதில் பெரும் சிக்கல் நிலை காணப்படுகிறது. டொலர் பிரச்னை காரணமாக கடந்த ஆறு மாத காலமாக அத்தியாவசிய பொருட்கள் மற்றும் திரவ இறக்குமதியாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளார்கள். சீனிக்கான தட்டுப்பாடு ஏற்பட்டபோதும் அரசாங்கம் கொள்கலன்களை விடுவிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியது.

பெருமளவிலான அத்தியாவசிய பொருட்கள் தற்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் அவற்றை துறைமுகத்தில் இருந்து விடுவிக்க முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. அந்தப் பொருட்களை விடுவிப்பது குறித்து அரசாங்கம் விரைவான தீர்மானத்தை முன்னெடுக்க வேண்டும். இல்லாவிடின் தற்போது சந்தையில் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்வதில் காணப்படும் நெருக்கடி மேலும் தீவிரமடையும்.

சமையல் எரிவாயு, சீனி, அரிசி, பருப்பு உள்ளிட்ட பல அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. டொலர் பிரச்னை காரணமாக அவற்றை துறைமுகத்திலிருந்து விடுவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (ஐ)

### மேலும் 15...

01 ஆணும் 02 பெண்களும் அடங்குவதாகவும் 60 வயதுக்கு மேற்பட்டோரில் 07 ஆண்களும் 05 பெண்களும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13,841 ஆக அதிகரித்துள்ளது.

### 626 தொற்றாளர்கள்...

மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 45 ஆயிரத்து 256 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து மேலும் 271 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 15 ஆயிரத்து 183 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

### சிவயோகன்...

கரவெட்டி, துன்னாலை மத்தியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவயோகன் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் , தமிழ் அரசு கட்சியின் உடுப்பிட்டி கிளையின் செயலாளருமாவார்.

இவரின் இறுதிக் கிரியைகள் இன்றைய தினம் கோவிற்கடவையிலுள்ள அவரின் இல்லத்தில் இடம்பெறவுள்ளன. (ஐ-02)

ஈழநாடு
Eelanadu

# ஸ்கொட்லாந்து அணியை வீழ்த்தியது பாகிஸ்தான்!

சார்ஜா, நவ. 08

ஸ்கொட்லாந்து அணியை 72 ஓட்டங்களால் வெற்றி கொண்ட பாகிஸ்தான் அணி இந்த உலகக் கிண்ணத் தொடரில் 100 வீதம் வெற்றி என்ற சாதனையையும் தக்க வைத்துக் கொண்டது.

உலகக் கிண்ணத்தின் சுப்பர் 12 சுற்றில் குழு 02இல் நேற்றிரவு நடந்த போட்டியில் ஏற்கனவே அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்த பாகிஸ்தான் ஸ்கொட்லாந்து அணியை எதிர் கொண்டது.

சார்ஜாவில் நடந்த இந்தப் போட்டியில் 3 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் பாபர் அஸாம் 66 ஓட்டங்களைக் குவிக்க, அனுபவ வீரரான சொஹைப் மலிக் 18 பந்துகளில் 6 சிக்ஸர்களை பறக்க விட்டு 54 ஓட்டங்களை குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதனால் பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்களை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது.

190 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 117 ஓட்டங்களையே பெற்றது.

ஸ்கொட்லாந்து அணிக்காக ரிச்சி பெர்ரிங்டன் மட்டும் 54 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் சதாப் கான் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

குழு 02இல் புள்ளிப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ள பாகிஸ்தான் அணி 11ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை எதிர்கொள்கின்றது. (ஐ)





# அரையிறுதியில் நியூசிலாந்து; வாய்ப்பை இழந்தது இந்தியா!

டுபாய், நவ. 08

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியை 8 விக்கெட்களால் வெற்றி கொண்ட நியூசிலாந்து அணி இருபது - 20 உலகக் கிண்ணத்தின் அரையிறுதி சுற் றுக்கு முன்னேறியது. இதன் மூலம் அரையிறுதிக்கு முன்னேறுவதற்கான வாய்ப்பை அதிகம் எதிர்பார்க்கப்பட்ட இந்திய அணி முற்றாக இழந்தது.

உலகக் கிண்ணத்தின் சுப்பர் 12 சுற்றில் குழு 02இல் இடம்பிடித்துள்ள நியூசிலாந்து அணி, அரையிறுதிக்கு தகுதி பெற்ற மற்றோர் அணியான பாகிஸ்தானுடன் இணைகிறது. இதன் மூலம் நாளை மறுதினம் புதன் கிழமை நடக்கும் முதல் அரையிறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணியை நியூசிலாந்து எதிர்கொள்கிறது.

முன்னதாக நேற்று டுபாயில் நடந்த 40ஆவது போட்டியில் நியூசிலாந்தை எதிர்கொண்ட ஆப்கானிஸ் தான் அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று துடுப்பாட்டத்தை முதலில் தெரிவு செய்தது.

ஆரம்ப வீரர்கள் வேகமாக வீழ்த்தப்பட்ட நிலையில், ஐந்தாவது வீரராகக் களமிறங்கிய நஜிபுல்லா ஷட்ரன் அதிரடியாக ஆடி 3 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகளுடன் 73 ஓட்டங்களைக் குவித்தார்.

இதனால், 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 124 ஓட்டங்களை எடுத்தது ஆப்கானிஸ்தான் அணி.

நியூசிலாந்தின் பந்துவீச்சில் ட்ரெண்ட் போல்ட் 3 விக்கெட்கள், ரிம் சௌதி 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

125 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கை துரத்திய நியூசிலாந்து அணி 2 விக்கெட்களை மட்டும் இழந்து 18.1 ஓவர்களில் வெற்றி பெற்றது.

தொடக்கம் கொடுத்த மார்ட்டின் குப்தில் 28, டரில் மிற்செல் 17 ஓட் டங்களை எடுத்தனர்.



கேன் வில்லியம்சன் 40, டெவன் கொன்வே 36 ஓட்டங்களை ஆட்ட மிழக்காமல் பெற்றனர்.

போட்டியின் நாயகனாக ட்ரெண்ட் போல்ட் தெரிவானார். (ஐ)












இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்:
டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-சிங்கப் பெண்ணே
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : நலந்தானா-வைத்தியர் முஸ்ரித்
முனாஸ்



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்-பின்னணி
குரல் கலைஞர்-கோபிநாயர்



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம்
(திருகோணமலை) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை)
மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
மறு ஒளிபரப்பு

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு